
கிருஷ்ணர் சூரியனுக்குச் சமமானவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிக்கை செப்டம்பர் / அக்டோபர் 2009 ரூபாய் 15/-



## கிருஷ்ணரே
### முழுமுதற் கடவுள்


## ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

## இறையன்பை வழங்கும் திருநாமஉச்சாடனம்

## ஸ்ரீல பிரபுபாதரின் வாழ்க்கைக் குறிப்பு

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

இதழ் 1, எண் 1 செப்டம்பர் / அக்டோபர் 2009


















2 ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் – ஓர் அறிமுகம்

3 கிருஷ்ணரே முழுமுதற் கடவுள்
ஸ்தாபக ஆச்சாரியர் அருளிய ஆன்மீக உரை

8 ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
பகவான் ஸ்ரீ கிருஷ்ணரது அவதாரத் திருநாளை அனுசரிப்பதற்கான வழிமுறை

11 இறையன்பை வழங்கும் திருநாம உச்சாடனம்
பக்தித் தொண்டின் ஐந்து முக்கிய அங்கங்களில் ஒன்றான திருநாம உச்சாடனம் பற்றிய விளக்கங்கள்

14 "பகவத் கீதை உண்மையுருவில்" இரண்டாம் வெளியீடு
தற்போது புதுப்பொலிவுடன் விளங்கும் பகவத் கீதை உண்மையுருவில் குறித்து சில விளக்கங்கள்

15 கடவுளைக் காணுதல்
உத்தமரான ஸ்ரீல பிரபுபாதருடன் ஓர் உரையாடல்

17 ஸ்ரீல பிரபுபாதர்
எல்லோர் நலனையும் என்றும் விரும்புபவர்

23 மாதவன் அவதரித்த மதுரா

24 தமிழகத்தில் இஸ்கான்
தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் திருப்பணிகள்—ஒரு பார்வை

25 ஸ்ரீமத் பாகவதம்

31 கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்



# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிக்கை

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944ல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிக்கையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிக்கைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்.*

**தலைமை:** விஜய கோவிந்த தாஸ்
**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்
**பிழைத் திருத்தம்:** பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ஜெய கோவிந்தராம தாஸ்
**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவன்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600073. போன்: (044) 22272920

**அச்சிட்டோர்:**

**பதிப்புரிமை** © 2009, பக்தி வேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை

# வணக்கம்




ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் மிகவுயர்ந்த போதனைகள் அனைத்து மக்களுக்கும் அவசியமானவை, அனைவராலும் அவற்றை அணுக முடியும். பகவான் சைதன்யர் பாரதமெங்கும் பயணித்த போது, குறிப்பிடத்தக்க காலத்தை தென்னிந்தியாவில் கழித்தார், நான்கு மாதங்கள் ஸ்ரீரங்கத்தில் தங்கியிருந்தார். அவ்வாறு இருப்பினும், சைதன்யரின் போதனைகளை தென்னிந்திய மக்களில் வெகு சிலரே புரிந்து கொண்டுள்ளனர் என்பது துரதிர்ஷ்டமே, கிழக்கிந்தியாவிலும் வடஇந்தியாவிலும் அவரது போதனைகள் நன்கு அறியப்பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்களின் நன்மைக்காக பக்தி வேதாந்த புத்தக அறக்கட்டளையினர் (BBT) தெய்வத்திரு பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரின் புத்தகங்களை தமிழில் வெளியிட்டு வருகின்றனர். அப்பிரச்சார பணியினை மேலும் மேம்படுத்த இந்த தமிழ் பத்திரிக்கையினை நாங்கள் அறிமுகப்படுத்துகிறோம். இதன் மூலம் சைதன்ய மஹாபிரபுவின் போதனைகளிலும் சங்கீர்த்தன இயக்கத்திலும் பல்வேறு தமிழர்கள் ஆர்வம் கொள்வர் என்பதே எங்களின் நம்பிக்கை.

—தவத்திரு பானு ஸ்வாமி,


ஜிபிஸி (இஸ்கான் உயர்மட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்), தமிழ்நாடு

## எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்



புருஷோத்தமரான
முழுமுதற் கடவுள்
ஸ்ரீ கிருஷ்ணர்



ஹரே கிருஷ்ண
கீர்த்தனத்தை தோற்றுவித்த
கிருஷ்ணரின் அவதாரம்,
ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு



தெய்வத்திரு
அ.ச. பக்திவேதாந்த சுவாமி
பிரபுபாதர், அகில உலக
கிருஷ்ண பக்தி இயக்கத்தின்
ஸ்தாபக ஆச்சாரியர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் - ஓர் அறிமுகம்

“ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்” என்னும் பெயரில் தங்களின் கரங்களில் தற்போது குடிகொண்டிருக்கும் இப்பத்திரிக்கையின் மகிமையைச் சற்று உணர்வதற்காக, இதோ இங்கு சில தகவல்கள்:

* 65 ஆண்டு கால பாரம்பரியமிக்க பத்திரிக்கை தற்போது தமிழுலகிற்கு.
* 1944ல் Back to Godhead என்ற பெயரில் தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரால் தொடங்கப்பட்ட ஆங்கிலப் பத்திரிக்கையைத் தழுவி தமிழில் வெளிவந்துள்ளது.
* ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையைத் தாங்கி, பிற்காலத்தில் உலக ஆச்சாரியராக விளங்கிய தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944ல் தனிநபராக, தானே எழுதி, திருத்தம் செய்து, அச்சடித்து, தெருத் தெருவாகச் சென்று விநியோகமும் செய்த பெருமையைத் தாங்கிய பத்திரிக்கை.
* சண்டையும் சச்சரவும் குழப்பமும் நிறைந்து தவறான வழியில் சென்று கொண்டிருக்கும் தற்கால சமுதாயத்தில் புரட்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் வெளிவரும் ஆன்மீக பத்திரிக்கை.
* நான் யார்? கடவுள் யார்? கடவுளுக்கும் எனக்கும் என்ன உறவு? நான் ஏன் துன்பப்படுகிறேன்? மரணத்திற்குப் பின் என்ன நடக்கும்? உலக அமைதிக்கான வழி என்ன? எல்லோரும் எவ்வாறு மகிழ்ச்சியாக வாழ முடியும்? போன்ற கேள்விகளுக்குத் தெளிவான அதிகாரப்பூர்வமான விடையை வழங்கும் பத்திரிக்கை.
* ஆன்மீக விஷயங்களை விஞ்ஞானப்பூர்வமான முறையில் வழங்கும் ஒரே பத்திரிக்கை.
* உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான மையங்களையும் இலட்சக்கணக்கான பக்தர்களையும் கொண்ட ஹரே கிருஷ்ண (இஸ்கான்) இயக்கத்தின் பத்திரிக்கை.
* முறையான குரு சீடப் பரம்பரையில் வரும் ஆச்சாரியர்கள் வழங்கிய தத்துவங்களை உள்ளது உள்ளபடி வழங்கும் பத்திரிக்கை.
* இப்பத்திரிக்கையில் வெளியிடப்படும் கருத்துக்கள் கடவுளால் வழங்கப்பட்ட பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற வேத சாஸ்திரங்களை அடிப்படையாகக் கொண்டவை.
* பர்மா, ரஷ்யன், குஜராத்தி, ஹிந்தி உட்பட 20க்கும் மேற்பட்ட மொழிகளில் வெளியிடப்பட்டு உலகிலேயே அதிகம் விற்பனையாகும் ஆன்மீகப் பத்திரிக்கை,
* இப்பத்திரிக்கையின் மூலம் தாங்கள் பெறும் நன்மைகள்:
  » வாழ்வின் அனைத்துப் பிரச்சனைகளுக்கும் நிரந்தரத் தீர்வு
  » மகிழ்ச்சியான ஆனந்தமயமான வாழ்க்கை
  » ஆன்மீகம் என்ற பெயரில் மக்களை ஏமாற்றி நரகத்திற்கு கொண்டு செல்லும் போலிகளிடமிருந்து விடுதலை
  » உலகளாவிய கிருஷ்ண பக்தர்களின் சங்கம்
  » ஹரே கிருஷ்ண இயக்கத்தில் உலகெங்கும் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளைப் பற்றிய தகவல்
  » பக்தித் தொண்டை முறையாக அறிந்துகொள்ள ஓர் ஈடுஇணையற்ற வழிகாட்டுதல்ந

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடமிருந்து விலகி நிற்கும் மனிதர்கள், இந்த ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின் மூலம் கிருஷ்ணரை தரிசிப்பதற்கான வழிமுறையை அறிந்து, ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தைப் பெறுவர் என்பது உறுதி.

—பதிப்பகத்தார், பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை








ஸ்தாபக ஆச்சாரியரின் ஆன்மீக உரை

ஹைதராபாத், இந்தியா--நவம்பர் 18, 1972


# கிருஷ்ணரே முழுமுதற் கடவுள்

**வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்**

பகவத் கீதை என்றால், ‘‘முழுமுதற் கடவுளால் பாடப்பட்ட பாடல்” என்று பொருள். ஸ்ரீ பகவான் உவாச, ‘‘புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் கூறினார்’’ என்னும் சொற்றொடரை பகவத் கீதை முழுவதும் நீங்கள் காணலாம்.

பகவத் கீதை கடவுளை அறியும் விஞ்ஞானமாகும். அறிவியலைக் கொண்டு அனைத்தும் முழுமையாக அறியப்படுவதுபோல, கடவுளைப் பற்றி அறிந்துகொள்ள நீங்கள் விரும்பினால், அதற்கான வழிமுறையைப் பின்பற்ற வேண்டும். அந்த வழிமுறையை பகவத் கீதையில் முழுமுதற் கடவுளான கிருஷ்ணரே கூறுகிறார், *பக்த்யா மாம் அபிஜானாதி*, ‘‘யாரேனும் என்னை அறிந்துகொள்ள விரும்பினால், பக்தித் தொண்டை ஏற்பதன் மூலம் என்னை அறிந்து கொள்ளலாம்”. மனக் கற்பனை யாலோ, யோக சித்தியாலோ, பலன்நோக்கு செயல்களாலோ அல்ல.



இக்கருத்து பகவத் கீதையில் மட்டுமின்றி அனைத்து வேத சாஸ்திரங்களிலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக (ஸ்ரீமத் பாகவதம் 10.14.29),

*அதாபி தே தேவ பதாம்புஜ-த்வய-*
*ப்ரஸாத-லேஷானுக்ருஹீத ஏவ ஹி*
*ஜானாதி தத்த்வம் பகவன்-மஹிம்னோ*
*ந சான்ய ஏகோ (அ)பி சிரம் விசின்வான்*

முழுமுதற் கடவுளை அவரது கருணையால் மட்டுமே புரிந்துகொள்ள முடியும். அந்த பிரசாதத்தின் (கருணையின்) துளியைப் பெறுவதன் மூலம் ஒருவன் அவரை அறிந்து கொள்ளலாம்,

கடவுளை பூரணமாக எவராலும் அறிய முடியாது. ஏனெனில், அவர் எல்லையற்றவர். நமது புலன்கள் குறை பாடுள்ளவை, மாயையின் வசப்படுபவை, ஏமாற்றும் இயல்புடையவை. நம்மிடம் பற்பல குறைபாடுகள் உள்ளதால், நமது புலன்களை மட்டும் உபயோகித்து கடவுளை அறிய முடியாது.

‘‘கடவுள் மிகவும் நல்லவர், கடவுள் பெரியவர்” என்பதை அறிந்துகொள்வது ஒரு நிலை. கடவுள் பெரியவர் என்பதோடு மட்டுமின்றி, அவரது குணங்கள் யாவை, அவரது ரூபம் என்ன, என பலவற்றையும் பகவத் கீதையை படிப்பதன் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

சாஸ்திரங்களிலிருந்து நாம் கேட்டுள்ளோம்:

*ஈஷ்வர: பரம: கிருஷ்ண:*
*ஸத்-சித்-ஆனந்த-விக்ரஹ:*
*அனாதிர் ஆதிர் கோவிந்த:*
*ஸர்வ-காரண-காரணம்*

கோவிந்தன் எனப்படும் கிருஷ்ணரே முழுமுதற் கடவுள். அவரது உடல் நித்தியமானதும் ஆனந்தமயமும் ஆனது. அனைத்திற்கும் ஆரம்பம் அவரே, அவரோ ஆரம்பமில்லாதவர். அவரே எல்லா காரணங்களுக்கும் மூலக் காரணமாவார். (பிரம்ம சம்ஹிதை 5.1)

5000 வருடங்களுக்கு முன்பு கிருஷ்ணர் இருந்த போது, தனது சுய ரூபத்தில், அறிவும் ஆனந்தமும் கொண்ட நித்தியமான ரூபத்தில் தோன்றியிருந்தார். மனிதரைப் போன்று தோன்றியதால், பக்தரல்லாதவர்களால் அவரை முழுமுதற் கடவுளாக புரிந்துகொள்ள முடியவில்லை. *அவஜானந்தி மாம் மூடா மானுஷீம் தனும் ஆஷ்ரிதம்.*

(பகவத் கீதை 9.11) மூடா என்றால் முட்டாள் என்று பொருள். அவர்கள் மிகவும் படித்தவர்களாக இருக்கலாம், ஆனால் கடவுளைப் பற்றி அறிந்து கொள்வதில் அவர்கள் முட்டாள்களாக உள்ளனர். ஏன், *மாயயா அபஹ்ருத க்ஞான ஆஸுரம் பாவம் ஆஸ்ரித:* (பகவத் கீதை 7.15). ஏனெனில், அவர்கள் கடவுளை எதிர்க்கின்றனர். *ஆஸுரம் பாவ* என்றால், ''கடவுள் இல்லை, கடவுள் இறந்து விட்டார், நான் கடவுள், நீ கடவுள், நிறைய கடவுள்கள் வீதிகளில் சுற்றித் திரிகின்றனர். நீ ஏன் கடவுளை தேடுகிறாய்" போன்ற கூற்றுகளின் மூலம் கடவுளை எதிர்ப்பவர்களைக் குறிக்கும்.

இதுபோன்ற பற்பல கருத்துகள் கடவுளை அற்ப விஷயமாக்கி விட்டன. முக்கியமாக, இந்தியாவில், கடவுளின் ''அவதாரங்கள்'' பலர் உள்ளனர், இந்தியா கடவுளை உற்பத்தி செய்யும் விளை நிலமாகும். கடவுள் என்றால் என்ன என்று மக்களுக்குத் தெரியவில்லை என்பதே இதன் பொருள். கடவுளை அற்பமான விஷயமாக அவர்கள் நினைக்கின்றனர். ஆனால் பகவத் கீதையிலிருந்து கடவுள் என்றால் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள முடியும். ''நீங்கள் எவ்வாறு முழுப் பிரபஞ்சத்தையும் கட்டுப்படுத்துகிறீர்?'' என்ற அர்ஜீனனின் கேள்விக்கு விளக்கமளித்த கிருஷ்ணர், அவ்விளக்கத்தின் இறுதியில்,

*அதவா பஹுநைதேன*
*கிம் க்ஞாதேன தவார்ஜுன*
*விஷ்டப்யாஹம் இதம் க்ருத்ஸ்னம்*
*ஏகாம்ஷேன ஸ்திதோ ஜகத்*

''முழுப் பிரபஞ்சமும் எனது சக்தியின் ஒரு சிறு பகுதியினால் செயல் படுத்தப்படுகிறது'' (பகவத் கீதை 10.42) என்று கூறினார். கடவுளின் சக்தியில் கால் பங்கு மட்டுமே இந்த பௌதிக உலகம், முக்கால் பங்கு ஆன்மீக உலகமாகும். *பரஸ் தஸ்மாத் து பாவோ (அ)ன்யோ (அ)வ்யக்தாத் ஸநாதன.* (பகவத் கீதை 8.20) பௌதிக உலகிற்கு அப்பால் மற்றொரு உலகம் உள்ளது. அஃது ஆன்மீக உலகம், ஆன்மீக இயற்கை எனப்படும். அந்த இயற்கை, பரா, உயர்ந்தது என விளக்கப்பட்டுள்ளது. பௌதிக இயற்கை, ஆன்மீக இயற்கை என இரண்டு சக்திகள் வேலை செய்கின்றன. பௌதிக இயற்கையை பகவத் கீதை (7.4) பின்வருமாறு விளக்குகின்றது:

*பூமிர் ஆபோ (அ)னலோ வாயு:*
*கம் மனோ புத்திர் ஏவ ச*
*அஹங்கார இதீயம் மே*
*பின்னா ப்ரக்ருதிர் அஷ்டதா*

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய எட்டு விதமான சக்திகள் பௌதிக இயற்கையை உருவாக்குகின்றன. அச்சக்திகள், பிரிக்கப் பட்ட சக்திகள் (பின்ன ப்ரக்ருதி) என்றும், தாழ்ந்த (அபரா) சக்திகள் என்றும் அறியப்படுகின்றன. *அபரேயம் இதஸ் த்வன்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம்.* (பகவத் கீதை 7.5) தாழ்ந்த சக்திக்கு மேலே மற்றொரு உயர்ந்த சக்தி உள்ளது, அதுவே உயிர்வாழி.

## உயர்ந்த சக்தி

சூரிய கோளத்தின் சக்தியே சூரியக் கதிர்கள் என்பதைப் போல, கடவுளின் சக்தியே உயிர்வாழிகள். சூரியக் கதிர்கள் பார்ப்பதற்கு ஒரே சீராக தோன்றினாலும், அது பற்பல சின்னஞ்சிறு துகள்களால் ஆனது, அதுவே விஞ்ஞானபூர்வமான அறிவு. அதுபோலவே உயிர்வாழிகளான நாமும் கடவுளின் மிகச்சிறிய துகள்களே. நாம் எவ்வளவு சிறியவர்கள் என்பதும் சாஸ்திரத்தில் (ஷ்வேதாஷ்வதர உபநிஷத் 5.9) விளக்கப்பட்டுள்ளது.

*பாலாக்ர-சத-பாகஸ்ய*
*ஷததா கல்பிதஸ்ய ச*
*பாகோ ஜீவ: ஸ விக்ஞேய:*
*ஸ சானந்த்யாய கல்பதே*

ஓர் உயிர்வாழியின் அளவு, தலைமுடி நுனியில் பத்தாயிரத்தில் ஒரு பங்காகும். நாம் நமது கண்களால் பெருமைபட்டுக் கொள்கிறோம். ஆனால் சாஸ்திரம் இங்கு குறிப்பிடும் ஆத்மாவின் நீள அகலத்தை உங்கள் கண்களாலோ சக்தி வாய்ந்த நுண்நோக்கியாலோ உங்களால் காண முடியாது. ஆத்மாவைக் காண இயலாததால், தத்துவவாதிகளில் ஒரு பிரிவினர், அஃது ''உருவமற்றது'' என்கின்றனர்.

முதலில், நாம் அனைவரும் ஜீவாத்மாக்கள், உயிர்வாழிகள் என்பதை புரிந்துகொள்ள முயற்சிப்பதே ஆன்மீக ஞானமாகும். கடவுளின் சிறிய துகளே ஜீவாத்மா என்பதால், ஜீவனை புரிந்துகொள்வதன் மூலம் கடவுளின் தன்மையை புரிந்துகொள்ள முடியும். சிறிதளவு தங்கத்திலிருந்து தங்கத்தின் தன்மையை புரிந்துகொள்ள முடியும், ஒரு துளி கடல் நீரிலிருந்து மொத்த கடல் நீரின் தன்மையையும் புரிந்துகொள்ள முடியும். அதுபோல, ஆத்மாவின் குணங்களை ஆராயும் போது, நாம் கடவுளின் குணங்களைப் புரிந்துகொள்ளலாம்.

## வல்லுநர்கள் கிருஷ்ணரை ஏற்றுக்கொள்கின்றனர்

ஒருவர் தன்னைப் பற்றி அறிந்து கொள்வதே ஆன்மீக கல்வியின் ஆரம்பமாகும். தன்னுணர்வை அடைவதற்கு நாம் மற்றவர்களிடமிருந்து அறிவைப் பெற வேண்டும், ஆசிரியரிடமிருந்து கற்றுக் கொள்ளுதல் அவசியம். பெரும் சாதுக்களான வியாஸர், நாரதர், தேவலர், அஸிதர், மற்றும் இதர மாமுனிவர்களும், தற்கால ஆச்சாரியர்களான ராமானுஜாசாரியர், மத்வாசாரியர், விஷ்ணு ஸ்வாமி, நிம்பார்கர், மற்றும் சங்கராச்சாரியர் உட்பட அனைவரும் கிருஷ்ணரை தலைசிறந்த ஆசிரியராக ஏற்றுக் கொண்டுள்ளனர். அனைத்து ஆசிரியர்களும் கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்றுக்கொள்கின்றனர். 500 வருடங்களுக்கு முன் தோன்றிய ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவும் கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொண்டார்.

*க்ருஷ்ணஸ் து பகவான் ஸ்வயம்,* கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. அதுபோல பிரம்மதேவரும் கூறுகிறார் :

*ஈஷ்வர: பரம: கிருஷ்ண:*
*சத்-சித்-ஆனந்த-விக்ரஹ:*
*அனாதிர் ஆதிர் கோவிந்த:*
*ஸர்வ-காரண-காரணம்*

''கோவிந்தனான கிருஷ்ணரே எல்லா காரணங்களுக்கும் காரணம். அவரே

அனைத்திற்கும் ஆரம்பம். அவரது நித்திய மான உடல், அறிவும் ஆனந்தமும் நிறைந்தது.'' (பிரம்ம சம்ஹிதை 5.1)

பற்பல ஆதாரங்களின் அடிப்படையில் நாம் கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்றுக் கொள்கிறோம். அதில் சந்தேகமில்லை. ஆனால் மக்கள் ஏன் ஏற்க மறுக்கிறார்கள்? பெரிய மேதைகளும் பெரிய விஞ்ஞானிகளும் கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக ஏற்க மறுப்பது ஏன்? அதற்கான காரணம் பகவத் கீதையில் கொடுக்கப்பட்டுள்ளது.

ந மாம் துஷ்க்ருதினோ மூடா:
ப்ரபத்யந்தே நராதமா:
மாயயாபஹ்ருத-க்ஞானா
ஆஸுரம் பாவம் ஆஷ்ரிதா:

''சற்றும் அறிவற்ற மூடர்களும், மனிதரில் கடைநிலையோரும், மாயையால் அறிவு கவரப்பட்டவர்களும், அசுரரின் நாத்திகத் தன்மையை ஏற்றவர்களுமான துஷ்டர்கள் என்னிடம் சரணடைவதில்லை.'' (பகவத் கீதை 7.15) க்ருதி என்றால் திறன்வாய்ந்தவர் என்றும், துஷ்க்ருதி என்றால் திறன்களை தீய செயல்களில் பயன்படுத்துவோர் (துஷ்டர்கள்) என்றும் பொருள். எல்லோரிடமும் சில திறன்கள் உள்ளன, சிலர் அவற்றை தவறான காரியத்திற்கு பயன்படுத்துவர். உதாரணமாக திருடனொருவன் தனது நல்ல மூளையை திருடுவதற்குப் பயன்படுத்துகிறான். அத்தகு நபர்கள் துஷ்க்ருதினர் எனப்படுவர்.



மற்றொரு வகுப்பினர் மூடர் எனப்படுவர். மூடர் என்றால் ''குறைபுத்தியுள்ளவர்'' அல்லது ''புத்தியற்றவர்'' என்று பொருள். அடுத்த வகுப்பினர் நராதமர், மனிதரில் கீழோர். இறுதியாக, மாயயாபஹ்ருத-க்ஞான, ''மாயையால் அறிவு கவரப்பட்டவர்கள்.'' இத்தகு வகுப்பினர் கிருஷ்ணரிடம் சரணடைவதில்லை.

இவ்வார்த்தைகள் எங்களால் உருவாக்கப்பட்டவை அல்ல, பகவத் கீதையில் உள்ளவை. பகவத் கீதையை படிப்பதாக நாம் கூறிக் கொள்வோமாயின், அதன் கருத்துகளை ஏற்பது அவசியம்.

எங்களது கிருஷ்ண பக்தி இயக்கம், க்ருஷ்ணஸ் து பகவான் ஸ்வயம், கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பதை உலகத்தாருக்கு பிரச்சாரம் செய்வதற்காகவே அமைக்கப்பட்டுள்ளது. நீங்கள் கடவுளை தேடுகிறீர்கள், உங்கள் மூளையை கசக்கிக் கொண்டுள்ளீர். இருந்தும் சில சமயங்களில், ''கடவுள் இல்லை,'' ''கடவுள் இறந்து விட்டார்,'' அல்லது ''எல்லோரும் கடவுளே'' என்றெல்லாம் கூறுகிறீர்கள். நாங்கள் அறிவிப்பது என்னவெனில், ''ஏன் மூளையைக் கசக்கிக் கொண்டுள்ளீர், இதோ இருக்கிறார் கடவுள், கிருஷ்ணர்.''

அதிகாரிகளிடமிருந்து கேட்பதாலும், சாஸ்திரங்களிலிருந்து கேட்பதாலும், கிருஷ்ண லீலைகளைக் கேட்பதாலும், கிருஷ்ணரே கடவுள் என்பதை நாம் தெரிந்து கொள்ளலாம். கிருஷ்ணரின் வாழ்க்கையைப் பற்றி படிக்கும் போது, அவர் ஆரம்பத்திலிருந்தே கடவுள் என்பதை நாம் அறிய முடியும். கடவுள் யோக சித்திகளால் உருவாக்கப்படுபவர் அல்ல. கடவுள் எப்போதும் கடவுளே, நாய் எப்போதும் நாய்தான். நாய் கடவுளாக முடியாது, கடவுள் நாயாக முடியாது.

வாழ்வின் ஆரம்பத்திலிருந்தே கிருஷ்ணர் கடவுளாகத்தான் இருந்தார். கிருஷ்ணர் தோன்றியபோது நான்கு

கைகளுடன் பகவான் விஷ்ணுவாகத் தோன்றினார். சாதாரண குழுந்தையாக மாறும்படி அவரது தாய் வேண்டிய காரணத்தால், இரு கைகளுடன் சாதாரண குழந்தையாக மாறினார். அவர்தான் கடவுள். ஆரம்பத்திலிருந்தே அவர் கடவுளாக இருக்க வேண்டும், யோக சித்திகளைப் பெற்றபின் கடவுளாக மாறுவது என்பது அல்ல.

நாம் கடவுளின் அம்சங்கள் என்பதால், நம்மிடமும் சக்திகள் உள்ளன. ஆனால் நாம் நூறு சதவீதம் கடவுளாக முடியாது. அஃது இயலாது. எல்லா தேவர்களையும் மற்ற உயிர்வாழிகளையும் ஆராய்ந்த பிறகு, மாபெரும் வேத வல்லுநர்கள், கிருஷ்ணரே நூறு சதவீதம் முழுமையான கடவுள் எனக் கண்டுள்ளனர். *ஏதே சாம்ஸ-கலா: பும்ஸ கிருஷ்ணஸ் து பகவான் ஸ்வயம்*. மற்றவர் அனைவரும் அவருக்குக் கீழ்படிந்தவர்களே. கடவுள்கள் பலர், ஆனால் அவர்கள் முழுமுதற் கடவுள் அல்ல. *ஈஷ்வர: பரம: க்ருஷ்ண.*

நாம் இங்கு பரமேஷ்வரனை அல்லது பரம ஈஷ்வரனைப் பற்றிப் பேசுகிறோம். இரு வார்த்தைகள் உள்ளன: ஈஷ்வர, பரமேஷ்வர; ஆத்மா, பரமாத்மா. பரம என்னும் சொல், உன்னதமானவரும் உயர்ந்தவருமான கடவுளைக் குறிக்கும். நாம் பிரம்மன், அவரோ பரபிரம்மன். பரபிரம்மன், பரமாத்மா, பரமேஷ்வர--இச்சொற்கள் அனைத்தும் கிருஷ்ணருக்குப் பொருந்தும்.

பகவத் கீதையை கேட்டபின் அர்ஜீனன் ஒப்புக் கொண்டான் (10.12).

*பரம் ப்ரஹ்ம பரம் தாம*
*பவித்ரம் பரமம் பவான்*
*புருஷம் ஷாஷ்வதம் திவ்யம்*
*ஆதி-தேவம் அஜம் விபும்*

"தாங்களே முழுமுதற் கடவுள், உன்னத இருப்பிடம், மிகவும் தூய்மையானவர், பூரண உண்மை. நீரே நித்தியமான தெய்வீக புருஷர், ஆதி தேவர், பிறப்பற்றவர், பெரியவர்." இதுவே கிருஷ்ணரின் நிலை.

பகவத் கீதையில் கிருஷ்ணரே கூறுகிறார், *அஹம் ஆதிர் ஹி தேவானாம்*, "அனைத்து தேவர்களுக்கும் நானே மூல



காரணம்." இந்திரன், சந்திரன், வருணன் என்று பற்பல தேவர்கள் உள்ளனர். ஆனால் கிருஷ்ணரே அவர்களின் மூலம் என்று அவரே கூறுகிறார். அதுமட்டுமின்றி, *அஹம் ஸர்வஸ்ய பிரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே*, "நானே அனைத்திற்கும் மூல காரணம், அனைத்தும் என்னிலிருந்தே தோன்றுகின்றன" (பகவத் கீதை 10.8) என்றும் அவர் கூறுகின்றார். யாரிடமிருந்து அனைத்தும் தோன்றுகின்றதோ அவரே பரம உண்மை, என்று வேதாந்த சூத்திரத்தில் (*ஜன்மாத்யஸ்ய யத:*) விளக்கப் பட்டுள்ளது.

கிருஷ்ணர் தனது சக்திகளை வைத்து பகவான் என அறியப்படுகிறார். பகவான் என்றால் ஆறு ஐஸ்வரியங்களையும் பூரணமாகப் பெற்றவர் என்று பொருள். முழுமுதற் கடவுள் என்பவர், செல்வம், பலம், புகழ், அழகு, துறவு, மற்றும் அறிவினை முழுமையாகப் பெற்றிருத்தல் அவசியம். இதுவே கடவுள் என்பதற்கான அர்த்தம். கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பதை பிரம்மதேவரும் ஏற்றுக் கொள்கிறார். *ஈஷ்வர: பரம: க்ருஷ்ண:*. எல்லாவற்றையும் கட்டுப்படுத்தும் உயர்ந்த நபர் கிருஷ்ணரே. கிருஷ்ணரிடம் சக்திகள் இல்லை என்றால், அவரால் எவ்வாறு எல்லாவற்றையும் கட்டுப்படுத்த முடியும்? நாம் அனைவரும் சிறிய அளவில் கட்டுப்படுத்துகிறோம். சிலர் அலுவலகத்தினை கட்டுப்படுத்துவர், சிலர் வீட்டைக் கட்டுப்படுத்துவர், சிலர் தொழிற்சாலையை கட்டுப்படுத்துவர். ஆனால் தான் எல்லாவற்றையும் கட்டுப்படுத்துகிறேன் என்று யாருமே கூற முடியாது. அஃது இயலாது. அத்தகு பரம ஆளுநர் கிருஷ்ணரே.

இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தில், பரம ஆளுநருடன் தொடர்பு கொள்ள நாங்கள் முயற்சி செய்கிறோம். எல்லாவற்றையும் கட்டுப்படுத்துபவராக ஆக நாங்கள் முயற்சி செய்யவில்லை. மாறாக அவ்வாறு கட்டுப்படுத்துபவரிடம் கட்டுப்பட விரும்புகிறோம், மற்றவர்களிடம் அல்ல. இதுவே எங்களின் கூற்று. உதாரணமாக, வேலை செய்ய விரும்புபவர் அரசாங்க வேலையை விரும்புவது இயற்கையே. எப்படியும் வேலை செய்ய வேண்டும், ஏன் சிறிய வியாபாரியிடம் வேலை செய்ய

வேண்டும், அரசாங்கத்தில் வேலை செய்யலாமே என்ற முடிவுக்கு வருவர்.

வேலை செய்யாமல் நம்மில் யாராலும் இருக்க முடியாது. அதுவே நமது உண்மையான நிலை. நாங்கள் கேட்பது என்னவெனில், ''எப்படியும் வேலை செய்கிறீர்கள், ஏன் கடவுளுக்காக வேலை செய்யக் கூடாது?''

பௌதிக வாழ்வில் நாம் நமது புலன்களுக்கு சேவை செய்து கொண்டுள்ளோம். காம இச்சையின் தூண்டுதலால் எந்தவொரு வெறுக்கத் தக்க செயலையும் செய்ய நாம் தயாராக உள்ளோம். இதிலிருந்து நாம் சேவகர்கள் என்பதை அறியலாம். *ஜீவேர ஸ்வரூப ஹய நித்ய க்ருஷ்ண தாஸ*, நமது ஸ்வரூப (உண்மையான) நிலை என்னவெனில், நாம் அனை வரும் கடவுளான கிருஷ்ணரின் சேவகர்கள் என்று சைதன்ய மஹாபிரபு கூறுகிறார். ஆனால் பௌதிக வாழ்வில் கட்டுண்டிருப்பவர்கள் அனைவரும் எஜமானராக முயற்சிக்கின்றனர். இதுவே வாழ்க்கைப் போராட்டம். அனைவரும் முயற்சிக்கின்றனர். ''நான் எஜமானராவேன், நான் உயர்ந்த வனாவேன்.'' ஆனால் நமது உண்மை நிலை சேவகனாக இருப்பதுவே. எனவே, தலைவனாக ஆவதற்கு முயற்சி செய்யும் நமது எண்ணங்கள் மாயை எனப்படுகிறது.

நான் தலைவன் என்ற தவறான எண்ணத்தை கைவிட்டுவிட்டு அந்த பரமனின் சேவகர் ஆவதற்கு முயன்றால் அதுவே முக்தி. முக்தி என்றால் பிரமாண்ட உருவத்தை அடைவதோ அல்லது நிறைய கரங்களையோ கால்களையோ அடைவது அல்ல. தவறான உணர்விலிருந்து விடுதலை அடைவதே முக்தி எனப்படும். நான் தலைவன் என்று நினைப்பது தவறான உணர்வு, இந்த உணர்வை மாற்ற வேண்டும். இதுவே கிருஷ்ண பக்தி இயக்கத்தின் குறிக்கோள்.

''நான் தலைவன் அல்ல, சேவகன்'' என்பதை ஒருவர் முழுமையாக புரிந்துகொள்ள வேண்டும். உயிர்வாழி முற்றிலும் பரமனின் விருப்பத்தைச் சார்ந்துள்ளான். நாம் பரமனின் விருப்பத் திற்கு கட்டுப்படவில்லை என்றால், மாயை யின் வசப்பட வேண்டும். பகவானின் சேவையை நிராகரித்தால் நாம் புலன்களின் சேவகர்களாகி விடுவோம். உண்மையில் அதுவே நடந்து கொண்டி ருக்கிறது. முழு உலகமும் பலதரப்பட்ட இச்சைகளுக்குத் தொண்டு புரிந்து வருகிறது.

இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தை நாங்கள் உருவாக்கவில்லை. இது ஸ்ரீமத் பகவத் கீதையை அடிப்படையாகக் கொண்டது. *ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் ஷரணம் வ்ரஜ*. ''அபத்தமான ஆசைகளை கைவிட்டுவிட்டு என்னிடம் சரணடையுங்கள்'' என்று கிருஷ்ணர் கூறுகிறார். இதுவே பகவத் கீதையின் முழு நோக்கம். நமது ஆசைகளை மாயை தூண்டிவிட, அந்த ஆசைகள் நம்மை தூண்டி விடுகின்றன. அந்தத் தூண்டுதல், நாமும் தலைவனாகலாம் என்ற பொய்யான விருப்பத்தைக் கொடுக்கிறது. அது மாயை. நாம் தலைவர் அல்ல, நாம் எவ்வாறு தலைவனாக இருக்க முடியும்? விஞ்ஞானத்தில் நாம் முன்னேறலாம், அற்புதமான இயந்திரங்களையும், ஆயுதங்களையும் உருவாக்கலாம். இருப்பினும், பிறப்பு, இறப்பு, நோய், முதுமை என்னும் மாயையின் விதிகளுக்கு நாம் உட்பட்டவர்கள். மாயையின் இந்த அடிப்படை கொள்கைகளிலிருந்து நாம் தப்பிக்க முடியாது.

எனவே, அறிவுள்ள மனிதன், உண்மையான கல்விகற்ற மனிதன், பகவான் கிருஷ்ணரிடம் சரணடைகிறான். *பஹுனாம் ஜன்மனாம் அந்தே க்ஞான-வான் மாம் பிரபத்யதே*. யாரெல்லாம் புத்திசாலிகளோ அவர்கள் கிருஷ்ணரிடம் சரணடைகின்றனர். இல்லையெனில், ''கிருஷ்ணர் யார்? நானும் கிருஷ்ணரைப் போன்றவன், நானே கடவுள்'' என்று நினைக்கிறார்கள். அது மாயை, அஃது உண்மையான அறிவு அல்ல.

''நாங்கள் முக்தியடைந்து விட்டோம், நாராயணராக, கடவுளாக ஆகி விட்டோம்'' என்று நினைப்பவர்கள் உள்ளனர். ஆனால் உண்மையோ அஃது அல்ல என்றும், அவர்கள் பௌதிக இயற்கையின் விதிகளுக்கு உட்பட்டவர்களே என்றும் அதன் பிடியிலிருந்து அவர்களால் வெளிவர முடியாது என்றும் ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. யாரால் வெளிவர இயலும்?

*தைவீ ஹ்யேஷா குண-மயீ*
*மம மாயா துரத்யயா*
*மாம் ஏவ யே ப்ரபத்யந்தே*
*மாயாம் ஏதாம் தரந்தி தே*

''ஜட இயற்கையின் முக்குணங் களாலான எனது இந்த தெய்வீக சக்தி வெல்லுவதற்கரியது. ஆனால் என்னிடம் சரணடைந்தோர் இதனை எளிதில் கடக்கலாம்.'' (பகவத் கீதை 7.14)

இந்த கிருஷ்ண பக்தி இயக்கம் மிகவும் உன்னதமான நன்மை பயக்கும் செயல்களை ஊக்குவிப்பதால் இஃது ஒரு மிகச்சிறந்த பக்தி இயக்கமாகும். இந்த இயக்கத்திற்காக உலகம் முழுவதும் நாங்கள் பிரச்சாரம் செய்கிறோம். கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக அறிவிப்பதே எங்களின் ஒரே குறிக்கோள். நாங்கள் கிருஷ்ணராக விரும்பவில்லை, அவரது சிறந்த சேவகராக விரும்புகிறோம். இதுவே எங்களின் கூற்று.

உலகின் அனைத்துப் பகுதிகளி லுள்ள அனைவரையும் நாங்கள் வரவேற்கின்றோம். மக்களும் வருகின் றனர், இந்த இயக்கத்தில் இணைகின்றனர். கிருஷ்ணர் இந்தியாவில் தோன்றியதால், கிருஷ்ணரைப் புரிந்துகொள்வதற்கான அனுகூலமான சூழ்நிலை இந்தியாவில் உள்ளது. ஆனால் இந்துக்கள் கிருஷ்ணரை அலட்சியம் செய்கின்றனர். இது மிகப்பெரிய துரதிர்ஷ்டம். ஆனால் நாங்களோ, இந்த இயக்கத்தில் சேர்ந்து, சாஸ்திரங்களை படித்து, சந்தோஷமாக இருக்குமாறு மக்கள் அனைவரிடமும் கேட்டுக் கொள்கிறோம். இதுவே எங்களது பிரச்சாரம். மிக்க நன்றி.

# ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணரது அவதாரத் திருநாளை அனுசரிப்பதற்கான வழிமுறை**

**வழங்கியவர்: தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்**

*புதுதில்லியிலிருந்து மாதம் இருமுறை வெளிவந்த The Harmonist என்ற கிருஷ்ண உணர்வுப் பத்திரிகையில் 1955ல் அச்சிடப்பட்ட கட்டுரையின் தமிழாக்கம்*

இந்தியா முழுவதும் உள்ள இந்துக்கள் ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை (பகவான் ஸ்ரீ கிருஷ்ணரது அவதாரத் திருநாள்) ஒரு சமயத் திருநாளாகக் கொண்டாடுகின்றனர். சில சமயம் இந்துக்கள் அல்லாதவர்களும் ஸ்ரீ கிருஷ்ணரின் மீதுள்ள ஆழ்ந்த மரியாதையினால் கிருஷ்ண ஜெயந்தி விழாவினை மகிழ்வுடன் கொண் டாடுவதை நாம் அனுபவத்தில் கண்டுள்ளோம். ஜெயந்தி என்னும் சொல் முழுமுதற் கடவுளின் பிறந்தநாளுடன் தொடர்புடையது. இவ்வுலகில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தோன்றிய கால கட்டத்தில் ஏற்பட்ட விசேஷமான கிரக அமைப்பினை குறிப்பதற்காக ஜெயந்தி என்னும் சொல் பிரத்யேகமாக உபயோகிக்கப்படுகிறது. ஆனால் தற்போதோ, ஜெயந்தி என்னும் இச்சொல், இயற்கையின் சட்டத்தில் பிணைக்கப்பட்டிருக்கும் பெரிய(?) மனிதர்களின் பிறந்த தேதிகளோடு இணைக்கப்பட்டு மிகவும் பிரபலமாக வருடந்தோரும் கொண்டாடப்படுகிறது. முழுமுதற் கடவுளோடு தொடர்புடையதும் விசேஷமான தனிச்சிறப்பை கொண்ட துமான ஜெயந்தி என்னும் சொல்லை வேறு விதத்தில் உபயோகிப்பது தவறாகும்.

ஜெயந்தி என்னும் சொல் கட்டுண்ட மனிதரது பிறந்தநாளை குறிக்க தவறாக உபயோகிப்பதால், ஸ்ரீ கிருஷ்ணரும் ஒரு கட்டுண்ட சாதாரண மனிதர் என்பது பொருளல்ல. இதை நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும். ஒருவன் பகவத் கீதையை பரம்பரையின் (இறையுணர்வுள்ள ஆத்மாக்களாலான சீடத்தொடரின்) மூலம் ஏற்றுக்கொண்டால், அவன் ஸ்ரீ கிருஷ்ணரை முழுமுதற் கடவுளாக, பூரண உண்மையாக ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். இருப்பவை எல்லாவற்றிற்கும் அவரே தோற்றுவாய். பகவான் அவரது அகாரணமான கருணையால் தமது பக்தர்களை பாது காப்பதற்காகவும், நம்பிக்கையற்றவர் களை அழிப்பதற்காகவும் தோன்று கிறார். ஸ்ரீ கிருஷ்ணர், நம்மைப் போன்று இயற்கையின் சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர் அல்ல; ஏனெனில், அந்த ஜட இயற்கையே அவரது பலதரப்பட்ட சக்திகளில் ஒன்றுதான்.

ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை கொண்டாடுவதன் தனிச் சிறப்பு, அவரை உள்ளவாறு அறிந்து கொள்வதற்கான முயற்சியே. மேலும், இதன் மூலம் கட்டுண்ட வாழ்விலிருந்து விடுதலை அடையலாம். அவரைப் பற்றி அறிந்து கொண்டால், பிறப்பு இறப்பு என்னும் சங்கிலித் தொடரிலிருந்து முற்றிலுமாக விடுபடலாம்.



நாம் ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தியை உண்மையாக அனுஷ்டித்தால், சமூகத்தில் உள்ள எல்லா பிரச்சனை களுக்கும் ஆபத்தான நிலைகளுக்கும் தீர்வு கிட்டும். மனிதர்கள் குறைபாடுடையவர்கள் என்பதால், சாதாரண திட்டங்களாலோ ஆலோசனைகளாலோ நமது பிரச்சனை களைத் தீர்க்க முடியாது. கட்டுண்ட ஆத்மா எவ்வளவுதான் முயற்சித்தாலும் மனிதனுக்கே உரிய குறைபாடுகள் அவனை எப்போதும் தொடரும். ஆனால் பகவத் கீதை போன்ற சாஸ்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ள தீர்வு என்றென்றும் பக்குவமானது, திவ்யமான தளத்திலிருந்து பேசப்பட்டதால் அச்சொற்கள் முழுமுதற் கடவுளுக்கு இணையானதே.

கடும் துயரத்தினால் ஆட்கொள்ளப் படும்போது, இயற்கை இரக்கமற்றது என்று அரசியல்வாதிகள் சில சமயங்களில் அறை கூவலிடுவர். ஆனால் அத்தகைய ஏமாற்றம் தோய்ந்த குரலின் மூலம், எவ்விதத்திலும் இயற்கையை கருணை யுடையவளாக மாற்றி விட முடியாது. இரக்கமற்ற இயற்கை பயங்கர மானவள், தனது தீர்மானத்தில் உறுதி யுடன் இருப்பவள். உயிர்வாழி ஒத்து ழைக்காமலோ கீழ்படியாமலோ இருந்தால், அவள் ஒருபோதும் சிறிதும் சகித்துக் கொள்ள மாட்டாள். இதுவே ஜட இயற்கையின் உண்மையான தோற்றம்—மஹிஷாசுரனுடன் சண்டை யிட்டபடி சீற்றம் மிக்க சிங்கத்தின் மீது நின்றிருக்கும் துர்கையின் படம் முறையாக வரையப்பட்டதாகும்.

இயற்கை அன்னையை சாந்தப் படுத்துவது என்பது அவள் மீது ஆதிக்கம் செலுத்துவதைப் போன்றே கடினமானதாகும். இதற்கான தீர்வு பகவான் ஸ்ரீ கிருஷ்ணராலேயே பரிந்துரைக்கப்பட்டுள்ளது: முழுமுதற் கடவுளிடம் சரணடைபவன் இயற்கை யின் சட்டங்களிலிருந்து விடுபட முடியும். ஆனால் திட்டங்களாலோ ஆலோசனைகளாலோ அவளது சட்டத்தை மீற யாராலும் முடியாது. ஆகையால் நாம் முழுமுதற் கடவுளின் சட்டங்களுக்கு தவறாமல் ஒத்துழைப்பு அளிப்போமாக; அத்தகு ஒத்துழைப்பு அளிக்கத் தவறினால், மூவகைத் துன்பங்கள் என்னும் திரிசூலத்தினால் நாம் நசுக்கப்படுவோம். அவ்வாறு நசுக்கப்படுவதையே மனித சமூகம் இயற்கையின் இரக்கமற்ற தன்மையின் அறிகுறியாகக் கருதுகின்றது.

இந்த முழுப் பிரபஞ்சமும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரது திட்டத்தின் கீழ் ஜட இயற்கையின் சட்டங்களின் மூலம் நிர்வகிக்கப்படுகிறது. ஜட இயற்கை ஸ்ரீ கிருஷ்ணரின் மேற்பார்வையில் செயலாற்றுகிறது. ஒவ்வொரு பொருளும் அவரது சுயவிருப்பத்திற்கேற்பவே உண்டாக்கப்படுகின்றன. ஜட இயற்கை எவ்வளவுதான் உயர்ந்தவளாயினும் அவள் ஆன்மீக இயற்கைக்கு கீழானவளே. உயிர்வாழிகளைப் பொறுத்தவரையில், இவர்கள் எவ்வித ஜடப் பொருளினாலும் உருவாக்கப்பட்டவர்கள் அல்ல. இவர்கள் ஆன்மீக வஸ்துக்கள், முழுமுதற் கடவுளின் அம்சம்; எனவே, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திட்டங்களைச் செயல்படுத்த இவர்கள் ஒத்துழைக்க வேண்டும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கும் பகவத் கீதையின் சப்தத்திற்கும் வேறுபாடு இல்லை என்பதால், பணிவுடன் செவிகொடுத்து பரம்பரையின் வாயிலாக பகவத் கீதையை கேட்பது கடவுளை உணர்வதாகும்.

ஆரம்பகாலத்தில் ஸ்ரீ கிருஷ்ணரின் இருப்பினை அவரது பௌதிக மற்றும் ஆன்மீகப் பிரதிநிதிகளைக் கொண்டு உணரலாம். தாழ்ந்த தன்மையுடைய பௌதிக இயற்கை, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அஹங்காரம் ஆகியவற்றால் பிரதிநிதிக்கப்படுகின்றது. உயர்ந்த தன்மையுடைய ஆன்மீக இயற்கை, பூரணமானதாகும்.

வாழ்க்கைக்கு ஆரம்பமாகவும் முடிவாகவும் விளங்கும் ஆன்மீக ஆத்மா, ஸ்ரீ கிருஷ்ணரை பிரதிநிதிக் கின்றது. ஆன்மீக ஆத்மா ஜடத்துடன் தொடர்புகொள்ளும்போது வாழ்க்கை தொடங்குகின்றது, அது வெளியே செல்லும்போது வாழ்க்கை முடிந்து விடுகிறது. ஆதித்யர்களில் அவர் விஷ்ணுவாக விளங்குகிறார். ஒளிரும் ஜோதியில் அவர் சூரியனாக விளங்குகிறார். சூரியன், ஸ்ரீ கிருஷ்ணரின் கண்களில் ஒன்றாக கருதப்படுகின்றது. அதன் மூலம் அவர் பிரபஞ்சத்தின் எல்லா இடங்களையும் காண்கின்றார். ஸ்வர்கத்தில் உள்ள நட்சத்திரங்களில் அவர் சந்திரனாக விளங்குகிறார். அழித்தலுக்கு பொறுப்பேற்கும் ருத்திரர்களில் அவர் சிவனாக விளங்குகிறார். ஓசைகளில் அவர் ஓம்காரமாக விளங்குகிறார். மனிதர்களில் அவர் மன்னனாக விளங்குகிறார். எல்லா வகையான ஆயுதங்களில் அவர் வஜ்ராயுதமாக விளங்குகிறார். அசுரர்களில் அவர் பிரகலாதனாக விளங்குகிறார். பறவைகளில் அவர் வைனதேயனாக (கருடனாக) விளங்கு கிறார். போர்வீரர்களில் அவர் இராமராக விளங்குகிறார். இவ்வாறாக அவர் மேலும் பல நிலைகளால் பிரதிநிதிக்கப்படுகிறார்.

ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஒத்துழைக் காவிடில் துயரம் நிச்சயம்; ஏனெனில், ஸ்ரீ கிருஷ்ணரிடம் ஒத்துழைக்காவிடில், மாயையுடன் (ஜட இயற்கையுடன்) ஒத்துழைப்பதற்கு வலுக்கட்டாயமாகத் தள்ளப்படுவோம். நாம் விரும்பியோ விரும்பாமலோ, எவரேனும் ஒருவரி டத்தில் ஒத்துழைத்தே ஆக வேண்டும். ஸ்ரீ கிருஷ்ணருடன் ஒத்துழைப்பது என்பதை வறட்டுத் தத்துவவாதிகளால் யூகித்துக் கூட பார்க்க முடியாது. ஆனால் அத்தகையவர்களுக்கு அவரது விஸ்வரூபத்தில் (பிரபஞ்ச ரூபம்) மனதைச் செலுத்துவது (சிரமமான வழிமுறை என்றபோதிலும்) உகந்ததே. தேவகியின் மடியில் சிறுகுழந்தையாக படுத்திருக்கும் கிருஷ்ணரை, வசுதேவரது மைந்தனை ஒருவரால் புரிந்துகொள்ள முடியவில்லையெனில், அவரது பிரம்மாண்டமான விஸ்வ ரூபத் தோற்றத்தில் அவரைப் புரிந்து கொள்ளட்டும். எவ்வாறிருப்பினும், உயிர்வாழிகளான நாம் பூரணமான ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சம், நாம் அனைவரும் முழு உடலின் பல்வேறு அங்கங்களே. முழு உடலிலிருந்து பிரிதல், அங்கங்களின் உபயோகமற்ற

தன்மையைக் குறிக்கும். ஸ்ரீ கிருஷ்ணரின் சேவையில் விருப்பத்துடன் இயற்கையாக ஈடுபடுவதிலிருந்து உயிர்வாழிகள் பிரிக்கப்படும் போது, உயிரற்ற உபயோகமற்ற பாகங்களாகி, நாளடைவில் மாயையின் தொடர்பினால் சிதைந்து கொண்டே போகின்றன. அப்போது, ஸ்ரீ கிருஷ்ணரின் திட்டத்தில் எவ்விதத்திலும் உபயோகப்படாத காரணத்தினால் அங்கங்கள் பெயரளவில் மட்டுமே அங்கங்களாக இருக்கும். அத்தகைய உயிரற்ற சிதைவடைந்த அங்கங்கள் மொத்த இருப்பிற்கும் பிரச்சனை உண்டாக காரணமாக அமைகின்றன. ஆகையால் அவை வெட்டி வீழ்த்தப்பட வேண்டும், அல்லது சீர்திருத்தப்பட வேண்டும்.

பக்தியின் செயல்கள் சீர்திருத்தத் திற்கான வழிமுறையாகும். பலன் நோக்குச் செயல்களை அனுபவிப்பதும் (கர்மமும்), வறட்டு தத்துவவாத பழக்கத்தை வளர்ப்பதும் (ஞானமும்) வெட்டி வீழ்த்தப்பட வேண்டியவை. கர்மமும் ஞானமும் உண்மையான ஆன்மீக வாழ்வை அழித்துவிடுகின்றன. ஆனால் பக்தி என்பது ஆனந்தமும் அறிவும் நிறைந்த உன்னதமான வாழ்க்கையாகும். அறிவும் ஆனந்தமும் திரிபடைந்து காணப்படும் பௌதிக வாழ்க்கை கர்மம் எனப்படும். ஞானம் என்பது ஆன்மீக அறிவுடன் கூடிய, ஆனால் ஆனந்தமற்ற வாழ்க்கை, பக்தி என்பதோ முழு அறிவுடன் கூடிய ஆனந்தமயமான ஆன்மீக வாழ்க்கை.

சமுதாயத்தின் அறிவுசார்ந்த வகுப்பினர் அனைவரும் (அரசியல் வாதிகள், தொழில் வல்லுநர்கள், கல்வித்துறையினர், தொழிலதிபர்கள், வழக்கறிஞர்கள் மற்றும் பலரும்) பௌதிக இயற்கையின் கவர்ச்சியில் மயங்கியுள்ளனர். பரம்பொருளுக்கும் உயிர்வாழிகளுக்கும் இடையிலுள்ள உறவை உணர்ந்துகொள்ளும் திறன் அவர்களிடம் உள்ளபோதிலும், அவர்கள் ஜட வாழ்விலேயே ஈடுபட்டுள்ளனர். இறைவனால் நிர்மாணிக்கப்பட்ட திட்டத்துடன் ஒத்துழைக்காத நவ நாகரிக மனிதர்கள், தங்களை ஜட சக்தியின் ஓர் உற்பத்தி பொருளாக தவறாக அடையாளம் கண்டுள்ளனர். சமுதாயத்தின் அத்தகைய ஏமாற்றும் தலைவர்கள், முழுமுதற் கடவுளுக்கும் நமக்கும் உள்ள உறவுமுறையை ஆன்மீக முறைப்படி புரிந்துகொள்வதற்கான பாதையில் இடையூறுகளை அளிக்கின்றனர். அந்த உறவுமுறையை பற்றிய எந்தவொரு கருத்தும் ஆலோசனையும் இன்றி, அவர்கள் பௌதிக சாதனைகளை உயர்த்திப் பேசுவர்; ஏனெனில், பொய் நிறைந்த அத்தகு முட்டாள்தனமான பேச்சு அவர்களுக்கு இன்பமளிக்கின்றது. பௌதிக செல்வத்தின் மூலம் நீண்ட செழுமையான வாழ்க்கையை ஸ்வர்க லோகத்தில் அனுபவிக்கலாம் என்றும், பௌதிக ஞானத்தில் முன்னேறுவதன் மூலம் ஜட வாழ்வின் கடும் வேதனைகளை வென்று விடலாம் என்றும் அவர்கள் தவறாக எண்ணிக் கொண்டுள்ளனர்.

**ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாள், பகவத்கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற புனித சாஸ்திரங்களை விவாதிப்பதற்கும், பகவானது புனித நாமத்தை ஜபிப்பதற்கும் ஓர் உன்னதமான சங்கத்தை ஏற்பாடு செய்ய நமக்கு வாய்ப்பளிக்கின்றது.**

நம்முள் பல மனிதர்கள், பகவத் கீதையிலுள்ள ஸ்ரீ கிருஷ்ணரின் செய்தியை தினந்தோறும் படிப்பதில் திறன் மிக்கவர்களாக உள்ளனர், ஆனால் வெகுசிலரே இறைவனது திட்டத்திற்கு இணங்கி நடக்கின்றோம்.

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாள், பகவத்கீதை, ஸ்ரீமத் பாகவதம் போன்ற புனித சாஸ்திரங்களை விவாதிப்பதற்கும், பகவானது புனித நாமத்தை ஜபிப்பதற்கும் ஓர் உன்னதமான சங்கத்தை ஏற்பாடு செய்ய நமக்கு வாய்ப்பளிக்கின்றது. இந்த பக்திமய சங்கத்தில் அனைவரும் கலந்து கொள்ளலாம். உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், படிக்காதவர் என்ற பாகுபாடிற்கான கேள்வி இல்லை. மேலும், நாடு, நிறம், இனம், அல்லது நம்பிக்கை போன்ற எந்த கேள்விக்கும் இடமில்லை. இவற்றிற்கெல்லாம் அப் பாற்பட்டு, தன்னையுணர்ந்த ஆத்மாக் களின் வாயிலாக வரும் ஆன்மீக ஒலி யதிர்வை பணிவுடன் செவிகொடுத்து கேட்பதின் மூலம், எல்லோரும் தம்மை அர்ப்பணிக்கலாம். செவிகொடுத்து கேட்டல் என்னும் இத்தகைய எளிமையான முறையினை ஒருவன் உறுதியுடன் பற்றிக் கொண்டால், முழுமுதற் கடவுளுடனான நமது நித்திய உறவை அது மீண்டும் புத்துயிர் பெறச் செய்கின்றது. ஜபம் செய்வதன் மூலம், அந்த இழந்த உறவு மறுபடியும் எழுப்பப்பட்டு, ஒருவரது இதயம் தூய்மையடைகிறது.

இந்தியர்கள் இந்த உன்னதமான கலையை சிரமமின்றி கற்று, உண்மையான அமைதி மற்றும் வளமைக்காக உலகம் முழுவதிலும் இதனைப் பரப்ப வேண்டும். இஃது அவர்களுக்குரிய சிறப்புரிமை, ஆனாலும் முழுமுதற் கடவுளின் திட்டத்துடன் ஒத்துழைக்கும் கலையை எல்லோராலும் பயில முடியும் என்பதை எதிர்பார்க்க முடியாது. இருந்தாலும் மிக முக்கியமான பிரமுகர்கள் மட்டும் இவற்றை தத்துவ ரீதியாக பயின்று பயிற்சி செய்தால், அஃது இதர மக்களுக்கு மிகவுயர்ந்த நன்மையைத் தரும்.

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாளை முன்னிட்டு சமுதாயத்தில் உள்ள தலைவர்கள், கல்வித்துறையினர், தத்துவவாதிகள், சமயவாதிகள், பாமர மக்கள் என அனைவரும் வருகை புரிந்து இக்கலையை அறிந்து கொண்டு அதனை உலகம் முழுக்க பரப்ப வேண்டுமென்று இங்கனம் அழைப்பிதழ் விடுக்கின்றோம். இந்த பொறுப்புள்ள பணியை செய்வோமென்ற உறுதிமொழியை நாம் இந்த ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி நன்னாளில் எடுப்போமாக.

(தமிழாக்கம்: பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி)

# இறையன்பை வழங்கும் திருநாம உச்சாடனம்

பக்தித் தொண்டின் அறுபத்தி நான்கு அங்கங்களை ஸ்ரீல ரூப கோஸ்வாமி அவர்கள் தனது படைப்பான பக்தி ரஸாம்ருத சிந்துவில் குறிப்பிட்டுள்ளார், அவற்றிலுள்ள ஐந்து அங்கங்கள் (திருநாம உச்சாடனம், ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல், வைஷ்ணவர்களின் சங்கம், விக்ரஹ ஆராதனை, புனித ஸ்தலங்களில் வசித்தல் ஆகியவை) மிகவும் சக்தி வாய்ந்தவை என்றும், அவற்றின் மீதான ஓரளவு பற்றுதலும் பக்திப் பரவசத்தை ஏற்படுத்தும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இவற்றில் முதலாவதான திருநாம உச்சாடனம் பற்றி தற்பொழுது காண்போம்.

வழங்கியவர்: ஜெய கோபிநாத தாஸ்

## புனித நாமத்தின் தன்மைகள்

புனித நாமம் உன்னதமானது, பகவான்ஸ்ரீகிருஷ்ணருக்கும்அவருடைய நாமத்திற்கும் எந்தவிதமான வேறுபாடும் கிடையாது. இந்த திருநாமத்தின் தன்மைகள் பத்ம புராணத்தில் பின்வருமாறு விளக்கப்பட்டுள்ளது:

நாம சிந்தாமணி: க்ருஷ்ணஸ்
சைதன்ய-ரஸ-விக்ரஹ:
பூர்ண: ஷுத்தோ நித்ய-முக்தோ
(அ)பின்னத்வான் நாம-நாமினோ:

**சிந்தாமணி** என்னும் சொல், கிருஷ்ணரின் திருநாமம் சிந்தாமணியைப் போன்றது என்பதைக் குறிக்கும். சிந்தாமணி என்பது ஒரு விசேஷமான கல். இதனைக் கொண்டு எப்பொருளை தொட்டாலும் அப்பொருள் உடனே தங்கமாக மாறிவிடும், கிருஷ்ணருடைய திருநாமமும் அதை போன்றதே. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் எப்படி எல்லாவற்றையும் (முக்தி உட்பட) தரவல்லவரோ, அதைப் போன்றதே அவரது திருநாமமும்.

**சைதன்ய** என்னும் சொல், கிருஷ்ணரின் திருநாமம் உயிரோட்ட முள்ளது என்பதைக் குறிக்கும், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமம் ஜடப் பெயர்களைப் போன்றதல்ல. ஒரு ஜடப் பொருளும் அதன் பெயரும் ஒன்றல்ல. உதாரணத்திற்கு நமக்கு தாகமாக இருந்தால் நாம் தண்ணீர் பருக வேண்டும். தண்ணீர் என்ற பொருளை பருக வேண்டும். ஆனால் அவ்வாறு செய்யாமல் "தண்ணீர், தண்ணீர்" என்று அதன் பெயரை உச்சரித்தால் நமக்கு தாகம் தீராது. இதிலிருந்து ஜடப் பொருளும் அதன் பெயரும் வித்தியாசமானது என்பதை அறிகின்றோம். ஆனால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரது திருநாமமும் அவரும் வேறல்ல, அவர் எவ்வாறு உயிரோட்டமுள்ளவரோ அதைப் போலவே அவரது திருநாமமும் உயிரோட்டமுள்ளதாகும்.

**ரஸ-விக்ரஹ** என்னும் சொற்கள், கிருஷ்ணரின் திருநாமம் எல்லா இன்பத்தின் உறைவிடம் என்பதைக் குறிக்கும். ஆகையால்தான் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமத்தை ஜெபித்து பாடி ஆடும்போது, பரவசமும் ஆனந்தமும் ஏற்படுகின்றன.

**பூர்ண: ஷுத்தோ** என்னும் சொற்கள், கிருஷ்ணரின் திருநாமம் முழுமையானது என்பதையும் சுத்தமானது என்பதையும் குறிக்கும். இந்த பௌதிக உலகம் களங்கம் நிறைந்தது என்பதால், எந்தப் பெயரை நாம் உச்சரித்தாலும் நம்மால் தொடர்ந்து அதனை உச்சரிக்க முடியாது. ஆனால் கிருஷ்ணருடைய திருநாமம் களங்கமற்றது, சுத்தமானது என்பதால், இந்த திருநாமங்களை இருபத்திநான்கு மணிநேரமும் தொடர்ந்து ஜெபித்தாலும் அலுப்போ சலிப்போ தட்டுவதில்லை. இவ்வுலகில் அதிக ஆனந்தமுடைய செயலாகக் கருதப்படும் பாலுறவில் நம்மால் தொடர்ந்து ஈடுபட இயலாது, இருபத்திநான்கு மணி நேரமும் அனுபவிக்கும்படி கட்டாயப் படுத்தப்பட்டாலும் அதனை நாம் நிராக ரித்து விடுவோம். சில நிமிடங்களே அதனை அனுபவிக்க முடியும். ஏனெனில் அது பௌதிகமானது. ஆனால் ஆன்மீக ஆனந்தமோ எல்லையற்றது. ப்ரஹ்ம-ஸௌக்யம் த்வனந்தம் (ஸ்ரீமத் பாகவதம் 5.5.1), அனந்தம் என்றால் எல்லையற்றது என்று பொருள். சுத்தமானதோடு மட்டுமல் லாமல் உள்ளும் புறமும் முற்றிலுமாக சுத்தப்படுத்துவது. பகவானின் திருநாமம் பூரணமானது. அந்த திருநாமத்தின் மூலமாகவே ஒருவர் பகவானுடைய ரூபம், குணம், லீலைகள் ஆகியவற்றை பூரணமாக உணரலாம்.

## இருவகையான திருநாமங்கள்

புனித நாமங்கள் இரு வகைப்படும். ஒன்று, முக்கிய நாமங்கள் என்றும், மற்றொன்று, கௌன்ய நாமம், அதாவது இரண்டாம் நிலை நாமங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இனிமையான ஆன்மீக உலகுடன் தொடர்புடைய திருநாமங்கள் (கிருஷ்ண, ராதா ரமண, கோபிஜன வல்லப, ராம, நரசிம்ம, வாசுதேவ போன்றவை) அவரது முக்கிய நாமங்களாகும். ஜடவுலகத்துடன் தொடர்பு கொண்டுள்ள திருநாமங்கள் (பிரம்மன், பரமாத்மா, ஜெகத்பதி, ஸ்ருஷ்டி கர்த்தா போன்றவை) இரண்டாம் நிலை நாமங்களாகும். இரண்டாம் நிலை

**இந்த ஹரிநாமம் கோலோகத்திலிருந்து வருவது மட்டுமின்றி, கிருஷ்ண பிரேமை என்று அழைக் கப்படும் கிருஷ்ணரின் மீதான மிகவுயர்ந்த அன்பினைத் தர வல்லது.**

நாமங்கள் முழுமுதற் கடவுளின் சக்தியில் ஒரு பகுதியை மட்டுமே பிரதிநிதிக்கின்றன. அவை பூரணமற்றவை. ஆனால் பகவானின் முக்கிய நாமங்களோ அவரிலிருந்து வேறுபட்டவையல்ல, மேலும் அவருடைய எல்லா சக்திகளையும் உள்ளடக்கியவை. ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் மஹாமந்திரத்தை ''மாதுர்ய நாமம்'' என்னும் பிரத்யேகமான வகையைச் சார்ந்ததாக ஸ்ரீல பக்திவினோத தாகூர் கூறுகிறார்.

## நாமத்தில் அவதரிக்கும் கிருஷ்ணர்

*கலி-காலே நாம ரூபே க்ருஷ்ண-அவதார*
*நாம ஹைதே ஹய ஸர்வ-ஜெகத்-நிஸ்தார*

இந்த கலி யுகத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், அவருடைய திருநாமத்தில், ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தில், அவதரிக்கின்றார். திருநாமத்தை ஜெபிப்பதன் மூலமாகவே ஒருவர் பகவானுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். யார் அவ்வாறு செய்கிறார்களோ அவர்கள் விடுதலையடைவது நிச்சயம். (சைதன்ய சரிதாம்ருதம், ஆதி லீலை, 17.22) பகவான் தனது உன்னதமான சக்திகள் அனைத்தையும் புனித நாமத்தில் வைத்திருக்கிறார். ஆகையால் நாம் புனித நாமத்தை உச்சரிக்கும்பொழுது பகவானுடன் நேரடித் தொடர்பில் வருகிறோம்.

## புனித நாம உச்சாடனம் கிருஷ்ணரை வெளிப்படுத்தும்

அத: ஸ்ரீ-க்ருஷ்ண-நாமாதி
ந பவேத் க்ராஹ்யம் இந்த்ரியை:
ஸேவோன்முகே ஹி ஜிஹ்வாதௌ
ஸ்வயம் ஏவ ஸ்புரத்-யத:

களங்கமான பௌதிகப் புலன்களைக் கொண்டு, உன்னத தன்மை கொண்ட பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணம், மற்றும் லீலைகளை புரிந்துகொள்ள முடியாது. ஆனால் நாவினால் (புனித நாமத்தை உச்சரித்து) யார் சேவை செய்கிறார்களோ, அவர்களுக்கு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் நாமம், ரூபம், குணம், மற்றும் லீலைகள் தானாக வெளிப்படுத்தப்படும். (பக்தி ரஸாம்ருத சிந்து 1.2.234)

## புனித நாம உச்சாடனம் பிரேமையை தரவல்லது

அஜாமிளன் என்ற கொடும் பாவி, தனது வாழ்வின் இறுதிக் கட்டத்தில் எம தூதர்களைக் கண்டு பயந்து, அருகிலிருந்த தனது கடைசி மகனை பெயர் சொல்லி அழைத்தான். அந்த பையனின் பெயர் ''நாராயணன்'' என்று இருந்த காரணத்தால், அஜாமிளன் தன்னை அழைத்ததாக ஏற்றுக் கொண்ட பகவான், அங்கே விஷ்ணு தூதர்களை அனுப்பி வைத்தார். அஜாமிளன் பெரும் பாவியாக இருந்தபோதிலும், இறக்கும் தருவாயில் பகவானின் நாமத்தை உச்சரித்ததால் அவன் மீண்டும் ஒரு வாய்ப்பினைப் பெற்றான். அதன்பின், பக்தித் தொண்டாற்றி வைகுண்டமடைந்தான். வேறு யாரையோ எண்ணிக் கொண்டு பகவானின் புனித நாமத்தை உச்சரித்த பெரும் பாவியான அஜாமிளனின் பாவங்கள்கூட அழிக்கப்பட்டு, அவனுக்கே உயர்ந்த கதி கிடைக்கின்றதென்றால், அத்தகு திருநாமத்தை நம்பிக்கையுடனும் அன்புடனும் உச்சரிக்கும் பக்தர்களின் நிலையை நாம் கூறவும் வேண்டுமா.

ஒருமுறை நாமாச்சாரியரான ஹரி தாஸ தாகூரிடம் பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு, ''இந்த கலி யுகத்தில், வேத கலாச்சாரமின்றி வாழும் மக்கள்



விடுதலை பெறுவது எங்ஙனம்?" என்று கேட்டார். அதற்கு ஹரிதாஸ தாகூர், "அவர்களிடம் பகவானைப் பற்றிய உணர்வு அதிகமாக இல்லாவிட்டாலும், ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை மிக சப்தமாக உச்சரித்தால் அஃது அவர்களுக்கு உதவும்" என்று பதிலளித்தார்.

சூரியக்கதிரைப் பார்க்கும்போது அது சூரியனிலிருந்து வருகின்றது என்று அறிகிறோம். அதுபோல பகவானின் திருநாமமும் ஆன்மீக உலகமான கோலோக விருந்தாவனத்திலிருந்து வருகிறது. *கோலோகேர ப்ரேம-தன, ஹரி-நாம-ஸங்கீர்தன.* இந்த ஹரிநாமம் கோலோகத்திலிருந்து வருவது மட்டுமின்றி, கிருஷ்ண பிரேமை என்று அழைக்கப்படும் கிருஷ்ணரின் மீதான மிகவுயர்ந்த அன்பினைத் தர வல்லது.

## உச்சரிப்பதற்கான தகுதி

இந்த நாம உச்சாடனம் செய்வதற்கு எந்த விதமான பௌதிக தடையும் கிடையாது. யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும், எந்த சூழ்நிலையில் வேண்டுமானாலும் உச்சரிக்கலாம். இனம், மதம், மொழி, நிறம், நாடு, அந்தஸ்து, படிப்பு, பணம் முதலியவை இதற்குத் தடை அல்ல, தத்ரார்பிதா நியமித: ஸ்மரனே ந கால:. (சிக்ஷாஷ்டகம் 2)

## உச்சரிப்பதில் இருவகை


நாம உச்சாடனம் இரு வகைப்படும். பல பக்தர்கள் ஒன்று கூடி பாடுதல், நாம சங்கீர்த்தனம் எனப்படும்; தனக்குத் தானே கேட்கும் வண்ணம் தனியாக உச்சரித்தல், நாம ஜெபம் எனப்படும்.

## செயல் முறை

பக்தர்கள் ஒன்றுகூடி கைகளை தட்டியபடி (முடிந்தால் கரதாளம், மிருதங்கம் ஆகிய இசைக் கருவி களையும் உபயோகித்து) ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தைப் பாடுவதன் மூலம், ஒருவர் நாம சங்கீர்த்தனத்தில் ஈடுபட முடியும். மேலும், இஸ்கான் கோவில்களில் நடைபெறும் ஞாயிறு விருந்து நிகழ்ச்சி, திருவிழாக்கள், மற்றும் காலையிலும் மாலையிலும் தினசரி நடைபெறும் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் கலந்து கொள்வதன் மூலமும், நாம சங்கீர்த்தனத்தின் பலனை ஒருவர் அடைய முடியும்.



ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை நமது காதுகளுக்கு கேட்கும்படி உச்சரித்தல், நாம ஜெபம் எனப்படும். ஒவ்வொரு பக்தரும் தினசரி ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடன் திரு நாமத்தை ஜெபிப்பது அவசியம். 108 மணிகள் கொண்ட ஜெப மாலையில் நாம ஜெபத்தை செய்தல் சிறந்தது. ஒவ்வொரு மணியிலும் இந்த மஹா மந்திரத்தை, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என முழுமையாக ஜெபம் செய்யும் பொழுது ஒவ்வொரு வார்த்தையையும் மிகக் கவனமாக நம் காதினால் கேட்க வேண்டும். 108 முறை மஹாமந்திரத்தை




உச்சரித்தால், அஃது ஒரு சுற்று எனப்படும். அதுபோல தினமும் 16 சுற்றுகள் ஜெபம் செய்வது அவசியம் என்று நமது ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் கட்டளையிட்டுள்ளார். மேலும், அதிகாலையிலேயே ஜெபம் செய்தல், மந்திரத்தின் சப்த அலைகளில் மனதை முழுமையாக ஒருமுகப்படுத்துதல், மற்றும் ஒவ்வொரு வார்த்தையையும் பிரஷ்டமாக உச்சரித்தல் ஆகிய அணுகுமுறைகளை நாம ஜெபத்தின் போது பின்பற்றும்படி ஸ்ரீல பிரபுபாதர் நமக்குப் பரிந்துரைத்துள்ளார். அவ்வாறு நாம் திருநாமத்தை ஜெபித்தால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் வெளிப்படுவது உறுதி.

ஷ்வேதாஷ்வதர உபநிஷத்தின் கூற்றின்படி, இரண்டு சுல்லிகளினுள் இருக்கும் நெருப்பு, உராய்தல் என்னும் முறையினால் வெளிப்படுவதைப் போல, நமது இதயத்திலும் திருநாமத்திலும் இருக்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், நாம ஜெபம் என்னும் முறையினால் வெளிப்படுவது உறுதி.

ஓம் தத் சத்.

பக்திப் பரவசத்தை ஏற்படுத்துவதில் அடுத்த அங்கமான, ஸ்ரீமத் பாகவதத்தை கேட்டல், என்பது குறித்து அடுத்த இதழில் விவரிக்கப்படும்.


ஜெய கோபிநாத தாஸ் B.E, அவர்கள் இஸ்கானின் சென்னை கிளையில் முழு நேர பிரம்மச்சாரியாக வசித்து வருகிறார், கல்லூரி மாணவர்களிடம் பிரச்சாரம், புத்தக விநியோகம், கோயில் நிர்வாகம் போன்றவற்றில் ஈடுபட்டு தொண்டு புரிந்து வருகிறார்.

# “பகவத் கீதை உண்மையுருவில்” இரண்டாம் வெளியீடு

பகவத் கீதை உண்மையுருவில் புத்தகத்தின் முதல் வெளியீட்டிற்கு பரிச்சயமான நபர்கள், இந்த இரண்டாம் வெளியீடு குறித்து அறிந்துகொள்ள இங்கு சில விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

இரண்டு வெளியீடுகளுக்கும் இடையில் பெரும் மாற்றங்கள் ஏதும் இல்லை என்றபோதிலும், இந்த இரண்டாம் வெளியீடு ஸ்ரீல பிரபுபாதரின் விளக்கங்களை மேலும் தெளிவாக வழங்கும் பொருட்டு எடுக்கப்பட்ட முயற்சியாகும்.


ஸ்ரீல பிரபுபாதர் பகவத் கீதைக்கான தனது ஆங்கில உரையை 1967ல் நிறைவு செய்தார். அமெரிக்காவின் மேக்மில்லன் கம்பெனியர் அதனை 1968ல் சுருக்கமாகவும், பின்னர் 1972ல் முழுமையாகவும் வெளியிட்டனர்.

அச்சமயத்தில், ஸ்ரீல பிரபுபாதரின் விளக்கவுரையை (அச்சடிப்பதற்குத் தகுந்த முறையில்) வடிவமைத்த அவரது ஆரம்பகால அமெரிக்க சீடர்கள், மிகுந்த சிரமத்துடன் அச்செயலை நிறைவேற்றினர். ஸ்ரீல பிரபுபாதரின் ஆங்கில உச்சரிப்பும் சமஸ்கிருத உச்சரிப்பும் அவர்களது காதுகளுக்கு வினோதமானவையாக இருந்தன. இருப்பினும் அவ்வெல்லா சிரமங்களுக்கு மத்தியிலும் ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதை உண்மையுருவில் (ஆங்கில பதிப்பு) மிகவும் வெற்றிகரமாக வெளிவந்தது. உலகெங்கிலும் பல்வேறு பேராசிரியர்களுக்கும் பண்டிதர்களுக்கும் பக்தர்களுக்கும் மாபெரும் பொக்கிஷமாகவும் அதிகாரப்பூர்வமான புத்தகமாகவும் விளங்கியது. பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு பல கோடி பிரதிகள் விநியோகிக்கப்பட்டன. 1981ம் ஆண்டு தமிழில் வெளியாகிய இப்புத்தகம் தமிழகமெங்கும் பேராதரவைப் பெற்று, அங்கீகாரம் பெற்ற பகவத் கீதையாக திகழ்ந்து வருகிறது.

இருப்பினும், 1972ம் ஆண்டின் ஆங்கில வெளியீட்டில் இருந்த சில குறைகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, பக்தி வேதாந்த புத்தக அறக்கட்டளையினர் மிகவும் கவனத்துடன் பணியாற்றி, முன் இருந்ததை விட மேலும் அதிகாரப்பூர்வமான தெளிவான விளக்கத்தை 1986ல் இரண்டாம் வெளியீடாக ஆங்கிலத்தில் வெளியிட்டனர். முந்தைய வெளியீட்டில் விடுபட்டிருந்த சில பகுதிகளும் சமஸ்கிருத ஸ்லோகங்களும், இரண்டாம் வெளியீட்டில் திருத்தி அமைக்கப்பட்டன.

ஆங்கிலத்தின் அந்த வெளியீட்டைப் பின்பற்றி, தமிழிலும் பிழைகள் நீக்கப்பட்டு, மொழிபெயர்ப்பில் இருந்த சில குறைகளும் நீக்கப்பட்டு, மக்கள் எளிமையாக புரிந்துகொள்ளும்படி மாற்றப்பட்டு, தற்போது இரண்டாம் வெளியீடாக வெளிவந்துள்ளது.

-- பதிப்பகத்தார், பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை





தற்போது புதுப்பொலிவுடன்

# கடவுளைக் காணுதல்

**29 ஜுன் 1974ல், ஆஸ்திரேலியாவின் மெல்போன் நகரில், தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் பத்திரிகை நிருபருக்கும் இடையில் நடந்த உரையாடலின் ஒரு பகுதி.**

**ஸ்ரீல பிரபுபாதர்:** மதம் என்றால் இறைவனது சட்டதிட்டங்களுக்கு கீழ்படிந்து நடத்தல், அவ்வளவே. இந்து, முஸ்லீம், கிறிஸ்தவம் என்று அஃது இருக்க முடியாது. ஒரு நாட்டின் சட்டத்தை எடுத்துக் கொள்வோம். நாட்டில் பலதரப்பட்ட குடிமக்கள் உள்ளனர், ஆனால் சட்டமானது, ''கிருஸ்தவர்களுக்கு", ''யூதர்களுக்கு", ''கருப்பு மனிதர்களுக்கு", ''வெள்ளை மனிதர்களுக்கு" என்று பிரிக்கப்படுவதில்லை. சட்ட விதிகள் அனைவருக்கும் ஒன்றே. ''இது கருப்பன் சட்டம்", ''இது வெள்ளையன் சட்டம்", என்று நீங்கள் கூற முடியாது. அவ்வாறு இருக்க முடியாது. அது விஞ்ஞானப் பூர்வமானதுமன்று. விஞ்ஞானரீதியாக புரிந்துகொள்வது என்றால், கடவுள் இருக்கின்றார், நாம் அனைவரும் அவரது சட்டத்தின் கீழ் உள்ளோம், அவர் மிகப்பெரியவர், நாம் அனைவரும் அவருக்குக் கீழ்படிந்தவர்கள், அவரது கட்டளையை நாம் மதித்து நடக்க வேண்டும். அதுவே உண்மையான மதம், நான் கூறுவது சரியா, தவறா?



**பத்திரிகை நிருபர்:** சரியே.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆகையால், நீங்கள் ''கிருஸ்தவ மதம்", ''இந்து மதம்", ''முஸ்லிம் மதம்" என்று கூற முடியாது. மதம் என்றால் மதமே. கடவுள் கிருஸ்தவரோ இந்துவோ முஸ்லிமோ அல்ல, கடவுள் என்பவர் கடவுளே. கடவுள் ஒருவரே. ஆனால் நாம் அவரை வெவ்வேறு கோணத்திலிருந்து புரிந்துகொள்கிறோம். வெவ்வேறு கோணத்திலிருந்து காணும் அத்தகைய பார்வையை, ''கிறிஸ்தவர்களின் பார்வை", ''இந்துக்களின் பார்வை", ''யூதர்களின் பார்வை", அல்லது ''முகம்மதியர்களின் பார்வை" என்று கூறலாம். ஆனால் அது வெறும் பார்வையே. சூரியனை எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்வோம். இங்கே, ஆஸ்திரேலியாவில் ஜுன் ஒரு குளுமையான மாதம், அதனால் நாம் சூரியனின் வெப்பத்தன்மையை அவ்வளவு அதிகமாக காண்பதில்லை. ஆனால் நீங்கள் ஆப்பிரிக்க நண்பனை அழைத்து சூரியன் வெப்பமாக உள்ளதா என்று கேட்டால் அதற்கு அவன், ''ஆம், மிகவும் வெப்பமாக உள்ளது." என்று கூறுவான். ஆகவே, சூரியனை அவன் மதிப்பிடும் விதமும் இங்கிருந்து நீங்கள் மதிப்பிடும் விதமும் வேறுபடுகின்றது. ஆனால், உண்மையில் சூரியன் என்பது ஒன்றுதான், ''ஆஸ்திரேலிய சூரியன்", ''ஆப்பிரிக்க சூரியன்", என்றெல்லாம் ஒன்றும் இல்லை. அதே போல ''இந்து மதம்", ''முஸ்லிம் மதம்", ''கிறிஸ்தவ மதம்" என்றெல்லாம் ஒன்றும் இல்லை. இந்த எண்ணங்கள் எல்லாம் நமது சிக்கலான மனதிலிருந்து வந்தவையே,

கடவுள் என்பவர் ஒருவர் என்பது போலவே, மதமும் ஒன்றே. நீங்கள் முதலில் கடவுள் என்றால் என்ன என்பதை அறிய வேண்டும். மேலும் அவரது கட்டளை என்னவென்று அறிந்திருக்க வேண்டும். அதற்கு நீங்கள் கீழ்படிந்து நடக்க வேண்டும்.

**பத்திரிகை நிருபர்:** நீங்கள் கூறுவது படி பார்த்தால், அவரவர்கள் தமது கருத்துக் களை உருவாக்கிக் கொண்டு ''முகமதியர்'', ''யூதர்'', ''இந்து'', ''கிருஸ்தவர்'' என்று பற்றிக் கொண்டுள்ளனரே தவிர, உண்மையில் மக்கள் கடவுளை உணர வில்லை. ஆயினும், மனித வாழ்வின் மிக முக்கியமான நோக்கம் கடவுளை உணர்வதே, சரியா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம், அஃது ஒன்றே மனித வாழ்வின் நோக்கம். அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதைத் தவிர நாம் எதைச் செய்தாலும் அது மிருகத் தனமே. நாய் எவ்வாறு குதிக்கின்றதோ நாமும் அவ்வாறு வெறுமனே குதித்துக் கொண்டிருக்கிறோம், அவ்வளவே.

நாம் கடவுளை உணரவில்லை யெனில், நமது வாழ்விற்கும் நாயின் வாழ்விற்கும் என்ன வித்தியாசம்? ''நான் கொழுத்த வேட்டை நாய்'', என்று ஒரு நாய் நினைக்கின்றது, ''நான் மிகப் பணக்கார டச்சுக்காரன்'' என்று ஒரு மனிதன் நினைக்கிறான். ஆகவே, நாயிற்கும் மனிதனுக்கும் என்ன வேறுபாடு உள்ளது?

**பத்திரிகை நிருபர்:** நீங்கள் கடவுளை உணர்ந்து விட்டீரா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? உங்களின் அபிப்பிராயம் என்ன?

**பத்திரிகை நிருபர்:** என்னால் கூற முடியவில்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** அப்படியெனில், நான் ''ஆம்'' என்று கூறினால், உங்களுக்கு என்ன புரியும்? நீங்களே கைத்தேர்ந்தவராக இல்லாதபோது, ''ஆம், நான் கடவுளை உணர்ந்துவிட்டேன்'', என்று நான் கூறினாலும், அதை எப்படி நீங்கள் உண்மையென ஏற்பீர்? கடவுள் உணர்வு என்றால் என்ன என்பதையே நீங்கள் அறியாதபோது இத்தகைய கேள்வியை எப்படி உங்களால் கேட்க முடிந்தது?

**பத்திரிக்கை நிருபர்:** நல்லது, கடவுள் உணர்வு என்றால் என்ன?

**ஸ்ரீல பிரபுபாதர்:** முதலில் இந்த கருத்தை உணர்ந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். உதாரணத்திற்கு, மருத்துவத் துறையைச் சார்ந்த ஒருவன் மற்றொருவனைப் பார்த்து, ''நீங்கள் மருத்துவத் துறையைச் சார்ந்தவரா'' என்று கேட்டு, அதற்கு அவன் ''ஆம்'' என்று கூறினால், அதன் பின்னர் அவர்களுக்குள் பரிமாறிக்கொள்ளப்படும் தொழில் நுட்ப வார்த்தைகளிலிருந்து, இரண்டாமவன் உண்மையிலேயே மருத்துவத்துறையைச் சார்ந்தவனா இல்லையா என்பதைப் புரிந்துகொள்ள முடியும். ஆனால் ஒருவன் தானே மருத்துவத் துறையைச் சார்ந்தவனாக இல்லாதபோது, ''நீ மருத்துவத் துறையைச் சார்ந்தவனா'' என்று மற்றொருவனை கேட்பதில் என்ன பிரயோஜனம்?

ஆகையால் நான் கூறும் பதிலை ஏற்பதற்கு நீங்கள் தயாராக இல்லாவிடில், எனது கடவுள் உணர்வினை பற்றி கேட்பதில் பயனில்லை. எனது பதிலை ஏற்கத் தயாரா?

**பத்திரிகை நிருபர்:** சரி.

**ஸ்ரீல பிரபுபாதர்:** மிகவும் நல்லது. நான் கடவுளை உணர்ந்தவன். நான் கடவுளை ஒவ்வொரு கணமும் காண்கிறேன்.

**பத்திரிக்கை நிருபர்:** கடவுளை உணர்வதற்கு தியானத்தை ஒரு வழி முறையாகக் காண்கிறீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம். தியானமும் ஒரு வழிமுறையே. ஆனால் தற்போது உம்மால் தியானிக்க முடியாது; ஏனெனில், உமக்கு கடவுள் என்றால் என்ன என்பதே தெரியாது. தியானம் என்றால் ஏதேனும் ஒன்றில் மனதை லயித்திருப்பது அல்லது எவரேனும் ஒருவரை தியானிப்பது. ஆனால் கடவுள் யார் என்று நீ தெரிந்து கொள்ளாமல், யார் மீது நீ தியானம் செய்வாய்?

முதலில், நீங்கள் கடவுளைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். எடுத்துக்காட்டாக, எங்களுக்கு கடவுள் கிருஷ்ணரை தெரியும், பகவத்கீதையில், *மன்மனா பவ மத் பக்த;* ''எப்போதும் என்னையே நினைத்து கொண்டிரு'' என்று கிருஷ்ணர் கூறுகிறார். ஆகையால் நாங்கள் கிருஷ்ணர் மீது தியானம் செய்கிறோம். அதுவே பக்குவமான தியானம்-ஏனென்றால் தியானம் என்றால் கடவுளைப் பற்றி நினைப்பது. ஆனால் கடவுளைப் பற்றி உனக்குத் தெரியவில்லையெனில், எவ்வாறு அவரை பற்றி நினைப்பாய்?

**பத்திரிகை நிருபர்:** பல்வேறு வேத புத்தகங்களில் கடவுள் என்பவர் ஒளியாக எழுதப்பட்டுள்ளாரே!

**ஸ்ரீல பிரபுபாதர்:** கடவுளே எல்லாம். இருள் கூட கடவுளே. கடவுளைப் பற்றிய வர்ணனை ஸ்ரீமத் பாகவதத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது, ''இருப் பவை எல்லாம் எவரிடமிருந்து தோன் றியதோ அவரே கடவுள்''. ஒளி இருப் பது போல இருளும் இருக்கின்றது. ஆகவே கடவுளிடமிருந்து ஒளி எவ்வாறு தோன்றுகிறதோ, அவ்வாறே இருளும் அவரிடமிருந்துதான் தோன்றுகிறது.

**பத்திரிகை நிருபர்:** தியானம் என்பது உமக்குள்ளே கடவுளைப் பார்ப்பதற்கான வழிமுறையா ?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம், அதுவே தியானத்திற்கு தகுந்த வர்ணனை. *தியானாவஸ்தித-தத்-கதேன-மனஸா பஷ்யந்தி யம் யோகின:,* மனதைக் கடவுளின் மீது ஒருமுகப்படுத்துவதன் மூலம் யோகிகள் அவரை தங்களது இதயத்தில் காண முயற்சிக்கின்றனர்.

ஆனால், கடவுளை இறுதியில் காண்பதற்கு, முதலில் அவர் யார் என்பதைப் பற்றி தெரிந்துகொள்ள வேண்டும். உதாரணமாக, எமது இயக் கத்திலுள்ள மாணவர்கள், கடவுள் யார், கடவுளின் குணநலன்கள் யாவை என்பதைப் பற்றி முதலில் தெரிந்து கொள்கின்றனர். அதன் மூலம் அவர்கள் கடவுளை நினைக்க முடியும். ஆனால் கடவுளைப் பற்றிய எந்தவொரு கருத்தும் உம்மிடம் இல்லையெனில், நீங்கள் எவ்வாறு அவரைப் பற்றி நினைக்க முடியும்?

# ஸ்ரீல பிரபுபாதர்

## எல்லோர் நலனையும் என்றும் விரும்புபவர்

“புலனின்பமே பிரதானம்” என்ற மோகத்தில் மயங்கியோர் மத்தியில் ஆன்மீக விஷயங்களுக்கு புத்துயிரளித்து, மனித வாழ்வின் உண்மையான குறிக்கோளான கிருஷ்ண பக்தியைத் தூண்டி, குழப்பங்கள் குடிகொண்ட கலி யுகத்தின் தற்போதைய நிலைக்குத் தகுந்தாற் போல கிருஷ்ண பக்தி வாழ்க்கையை நடைமுறைப்படுத்தி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் இருப்பிடத்திற்கு உயிர்வாழிகளைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோளுடன் தன் வாழ்நாள் முழுவதும் அரும்பாடுபட்ட ஆன்மீக குருவே ஸ்ரீல பிரபுபாதர்.

வழங்கியவர்: மதன கோபால தாஸ்

### தோற்றம்

ஸ்ரீல பிரபுபாதர் என்று அனைவராலும் அழைக்கப்படும் தெய்வத்திரு. அபய சரணாரவிந்த பக்திவேதாந்த சுவாமி அவர்கள், 1896 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாள் கல்கத்தாவில், கௌர் மோகன் தே மற்றும் ரஜனி என்போரின் நன்மகனாய் பிறந்தார். அவருக்கு பெற்றோர் இட்ட பெயர், அபய் சரண் தே. அவரின் ஜாதகத்தை கணித்த ஜோதிடர், வருங்காலத்தில் இக்குழந்தை கடல் கடந்து சென்று, மிகப்பெரிய ஆன்மீக குருவாகி, 108 கோவில்களை நிறுவுவார் என்று முன்னுரைத்தார்.

### இளமைப்பருவம்

அபயின் தந்தை அவருக்கு சிறுவயதிலிருந்தே பக்தி நெறிகளை ஊட்டி வளர்த்தார். ஸ்ரீராதாகிருஷ்ணருக்கு



பூஜைகள் செய்வது பற்றியும் சைதன்ய மஹாபிரபுவைப் பற்றியும் அவரது போதனைகளை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் மிக உறுதியாக உரைத்து வளர்த்தார். இவையெல்லாம் அபயின் மனதில் ஆழமாகப் பதிந்தன. அவரது மனதை சிறு வயதிலேயே கவர்ந்த விஷயம், கல்கத்தாவில் வருடந்தோறும் நடை பெறும் ஜகன்னாதரின் ரதயாத்திரை. தன் தந்தையிடம் சொல்லி, தானே சிறிய ரதம் ஒன்றினைச் செய்து, நண்பர்களுடன் கூடி, ஜகன்னாதரின் ரதயாத்திரையை அபய் மிகக் கோலாகலமாக நடத்தினார். ராதாகிருஷ்ண விக்ரஹங்களுக்கு பூஜை செய்தல், நைவேத்யம் செய்தல் போன்றவற்றை தந்தையிடமிருந்து கற்று, அதன்படி கிருஷ்ண பிரசாதத்தை உண்டு வந்தார்.

### சுதந்திரப் போராட்டம்

கல்லூரிக் கல்வி பயின்றபோது அபய், காந்தியக் கொள்கைகளால் கவரப்பட்டார். இந்திய சுதந்திரப் போரில் தானும் பங்கு கொண்டு வெள்ளையரை எதிர்த்துப் போராட விரும்பினார். கல்லூரியில் அவருக்கு ஒரு வருடம் முன்னால் படித்துக் கொண்டிருந்த சுபாஷ் சந்திரபோஸ் சுதந்திரப் போராட்ட எண்ணத்தை அவரிடம் வளர்த்தார். அரசியலில் ஈடுபாடு இல்லாத போதும் சுதந்திரப் போராட்டத்தின் மேல் அவருக்கு ஆர்வம் ஏற்பட்டது. சாதுவைப் போல வாழ்ந்ததாலும் பகவத் கீதையைப் பின்பற்றியதாகக் கூறியதாலும், அபய்க்கு காந்தியின் மேல் ஒரு தனிப்பட்ட ஈடுபாடு ஏற்பட்டது. சுதந்திரப் போராட்டத்தில் அபய் ஈடுபடுவது, அவரது தந்தையான கௌர் மோகனுக்கு கவலையளித்தது. மூன்றாம் வருட கல்லூரிப் படிப்பின் போது, ராதாராணி தத்தா என்னும் பெண்ணை கௌர் மோகன் அபய்க்கு திருமணம் செய்து வைத்தார். சுதந்திரப் போராட்ட எண்ணத்தின் காரணத்தால், ஆங்கிலேயர் அளித்த பட்டத்தை வாங்க அபய் மறுத்து விட்டார்.

### பக்திசித்தாந்தருடன் சந்திப்பு

அபய் கல்லூரியில் பட்டம் வாங்க மறுத்துவிட்ட போதிலும், கௌர் மோகன் தனது நண்பர் ஒருவரின் மூலம் அவருக்கு ஓர் இரசாயனத் தொழிற்சாலையில் வேலை வாங்கிக் கொடுத்தார். அங்கு வேலை பார்த்து வந்த சமயத்தில்,



1922ல் அபயின் நண்பர் ஒருவர் அவரை ஒரு சாதுவிடம் அழைத்துச் செல்ல விரும்பினார். அபய்க்கு அதில் ஈடுபாடு இல்லாவிட்டாலும், நண்பனின் பிடிவாதத்தால், அந்த சாதுவைச் சந்திக்க கௌடிய மடத்திற்குச் சென்றார். அந்த சந்நியாசியின் பெயர், ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர், பிரம்மதேவரிடமிருந்து தொடங்கி குரு சீடப் பரம்பரை வாயிலாக பகவான் சைதன்யரின் வழி வந்த அங்கீகரிக்கப்பட்ட ஆச்சாரியர் அவர். அவரே தனது வாழ்க்கையை மாற்றப்போகும் மஹான் என்பதை அபய் அப்போது அறியவில்லை. அபயும் அவரது நண்பரும் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து எழுவதற்கு முன்பே, ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி, "கல்வி கற்ற இளைஞர்களான நீங்கள், சைதன்ய மஹாபிரபுவின் போதனைகளை மேல்நாடுகளில் ஏன் பரப்பக் கூடாது?" என வினவினார். அவரது கேள்வியினால் ஆச்சரியமுற்ற அபய், இந்தியா அடிமைப்பட்டு இருக்கும் பட்சத்தில் நமது ஆன்மீகச் செய்திகளை யார் கேட்பர் என்று வாதம் செய்தார். கிருஷ்ண பக்தி எவ்வித அரசியல் சூழ்நிலைக்கும் உட்பட்டதல்ல என்பதை ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தத்துவப்பூர்வமாக விளக்கியதால், திருப்தியுற்ற அபய், அவர்மீது மிகுந்த நாட்டம் கொண்டு, அவர் ஓர் உண்மையான சாது என்பதை உணர்ந்தார். பக்திசித்தாந்த சரஸ்வதியைத் தனது ஆன்மீக குருவாக ஏற்றுக் கொண்டு, அவரது வழியில் நடக்க உறுதி பூண்டார். காலப்போக்கில் அபய் தனது குருவின் மடத்திற்காக பற்பல தொண்டுகளை ஆற்றி வந்தார், 1933ல் முறையாக தீட்சையும் பெற்றார். ஆன்மீக ஸ்தலங்களிலேயே மிகவும் புனிதமானதாகக் கருதப்படும் ராதா குண்டத்தின் கரையில், 1935ல் ஸ்ரீல பக்திசிந்தாந்தர் அபயிடம், "உன்னிடம் எப்போது பணம் கிடைத்தாலும், புத்தகங்களை அச்சடித்து விநியோகம் செய்" என்று மற்றுமொரு முக்கியமான உபதேசத்தை அளித்தார். பின்னர், 1937ல் பக்திசித்தாந்தர் இவ்வுலகினை விட்டுச் சென்றார்.

## பத்திரிக்கையின் மூலம் பிரச்சாரம்



விருந்தாவனத்தின் ராதா தாமோதர் கோயிலில் பிரபுபாதர் தங்கியிருந்த அறை

தனது ஆன்மீக குருவின் கட்டளைகளை அடிக்கடி நினைவு கூர்ந்த அபய், அவற்றை நிறைவேற்றும் பணியில் இறங்கினார். 1944ல், Back to Godhead என்னும் பத்திரிக்கையினைத் தொடங்கி, உலகில் நிலவும் பிரச்சனைகளையும் அதற்கான தீர்வுகளையும் சாஸ்திர கண்ணோட்டத்துடன் தனது குருவைப் போலவே துணிச்சலுடன் எழுதத் தொடங்கினார். (அந்த பத்திரிக்கை இன்றும் அவரது சீடர்களால் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது, அதனை அடிப் படையாகக் கொண்டதே தற்போது தமிழில் வெளிவரும் *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்*.) தன்னுடைய வீட்டின் முன்னறையில் உட்கார்ந்தபடியே சிந்திப்பது, எழுதுவது, டைப் செய்வது போன்ற வேலைகளை செய்து வந்தார். பத்திரிக்கை நடத்த பணம் புரட்ட முடியாத நிலையிலும், அதனை அச்சடித்து அவரே தெரு தெருவாகச் சென்று விநியோகமும் செய்து வந்தார்.

## சந்நியாசம் மேற்கொள்ளல்

கிருஷ்ண பக்தியை உலகெங்கிலும் பரப்புவதற்கு அடித்தளம் அமைக்கும் பொருட்டு, 1952ல் உத்திரப் பிரதேசத்தில் உள்ள ஜான்சி நகருக்குச் சென்று, அங்கிருந்த கீதா மந்திர் எனும் இடத்தில் தங்கியபடி தனது பிரச்சாரப் பணியினை ஆரம்பித்தார். கிருஷ்ண பக்தி நன்கு பரவத் தொடங்கிய போதிலும், அக்கட்டிடம் அவரிடமிருந்து சில காரணங்களுக்காகப் பறிக்கப்பட்டது. அதன்பின், மீண்டும் கல்கத்தா சென்ற அபய் குடும்பப் பொறுப்புகளில் சிக்குண்டார். எவ்வளவோ எடுத்துக் கூறியும் கிருஷ்ண பக்தியில் ஆர்வமின்றி இருந்த தனது மனைவியையும் வீட்டையும் விட்டு வெளியேறி, வேதப் பாரம்பரியத்தைப் பின்பற்றிய வண்ணம், அபய் 1954ல் வானபிரஸ்தம் மேற்கொண்டு காலப் போக்கில் விருந்தாவனத்தில் தங்கினார். அடிக்கடி டில்லிக்கும் மற்ற நகரங்களுக்கும் சென்று பிரச்சாரம் செய்வது, புத்தகப் பணியினை மேற்பார்வை இடுவது என செயல்பட்டு வந்தார். ஒருமுறை அபயின் கனவில் தோன்றிய அவரது ஆன்மீக குரு அவரை சந்நியாசம் மேற்கொள்ள தூண்டினார். சந்நியாசம் பெற்றுக்கொள்வதன் மூலம் கிருஷ்ண பக்தியை மேலும் அதிக வேகத்துடன் பிரச்சாரம் செய்ய முடியும் என்றும், பிரச்சார இயக்கத்தை தலைமை ஏற்று நடத்துவதற்கு சந்நியாசம் மிகமிக அவசியம் என்றும் உணர்ந்த அபய், 1959ல் விருந்தாவனத்தில் "அபய சரணாரவிந்த பக்திவேதாந்த சுவாமி" என்ற பெயருடன் சந்நியாசம் மேற்கொண்டார்.



செப்டம்பர் 17, 1959, சந்நியாசம் பெற்றவுடன் பக்திவேதாந்த சுவாமி


ஜூன் 1964, பக்திவேதாந்த சுவாமி பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியைச் சந்தித்து பாகவதத்தின் பிரதிகளை காட்டுதல்

## அமெரிக்கப் பயணம்

சந்நியாசம் பெற்ற பின்னர், தன் முழு நேரத்தையும் பக்திவேதாந்த சுவாமி ஸ்ரீமத் பாகவதத்திற்கு ஆங்கிலத்தில் உரை எழுதுவதில் செலவழித்தார். பலவித சிரமங்களுக்கிடையே பாகவதத்தின் மூன்று பெரிய பாகங்களை தயார் செய்தார். அவற்றை அச்சடித்த பின்னர், மேல்நாடுகளில் கிருஷ்ண பக்தியை பிரச்சாரம் செய்வதற்கான ஏற்பாடுகளை மிகவும் மும்முரமாகச் செய்ய ஆரம்பித்தார். பற்பல முயற்சிகளுக்குப் பின், அமெரிக்காவில் வசித்து வந்த கோபால் அகர்வால் என்பவர் பக்திவேதாந்த சுவாமி அங்கு வருவதற்குத் தேவையான கடிதத்தை வழங்க, விசாவும் பி பாரமும் கிடைத்தன. ஸிந்தியா கப்பல் கம்பெனியின் முதலாளியான திருமதி சுமதி மொரார்ஜி தனது சரக்குக் கப்பலில் பயணம் செய்ய அவருக்கு இலவச டிக்கட் கொடுத்தார். பக்திவேதாந்த சுவாமியின் நீண்ட நாள் கனவு நனவாக, 1965, ஆகஸ்ட் 13ம் நாள் கல்கத்தாவிலிருந்து ஜலதூதா என்ற சரக்குக் கப்பலில் அமெரிக்கா நோக்கிப் புறப்பட்டார். கடல்காற்று ஒத்துக் கொள்ளாமல், கப்பலில் அவருக்கு மயக்கம், வாந்தி போன்ற பலவித இன்னல்கள் ஏற்பட்டன, எல்லாவற்றிற்கும் மேலாக இருமுறை மாரடைப்பு வந்தது. தன்னுடைய பயணத்தைத் தொடர முடியுமா என்று பக்திவேதாந்த சுவாமி வருத்தப்பட, கிருஷ்ணர் அன்றிரவே அவரின் கனவில் தோன்றி கவலைப்படாமல் பயணத்தைத் தொடரலாம் என்றும் தான் உதவி செய்வதாகவும் உறுதியளித்தார். இவ்வாறு, முப்பத்தைந்து நாள்கள் பயணத்திற்குப் பின், செப்டம்பர் 19ம் நாள் நியூயார்க் நகரின் புரூக்ளின் துறைமுகத்தை பக்திவேதாந்த சுவாமி அடைந்தார்.


பக்திவேதாந்த சுவாமியை அமெரிக்கா கொண்டு சென்ற ஜலதூதா கப்பல்

## அமெரிக்க மண்ணில் கிருஷ்ண பக்தி

அமெரிக்க மண்ணில் இறங்கிய பக்திவேதாந்த சுவாமியிடம் பணமும் இல்லை, ஆட்களும் இல்லை; இடது பக்கம் செல்ல வேண்டுமா வலது பக்கம் செல்ல வேண்டுமா என்பதைக் கூட அறியாதவராய் இருந்தார், எனினும் எல்லாவற்றையும் அறிந்த கிருஷ்ணரை அவர் அறிந்திருந்ததால், அவர் துணிவுடன் இருந்தார். சுமார் ஒருமாத காலம் பெனிசில்வேனியாவில் உள்ள அகர்வால் என்பவரின் வீட்டில் தங்கியிருந்த பக்திவேதாந்த சுவாமியை பத்திரிகைகள், ஸ்வாமிஜி என்று குறிப்பிட்டு, அவரின் எளிமை பற்றியும் சமைக்கும் விதம் பற்றியும் விமர்சித்து புகைப்படங்களையும் வெளியிட்டன. அதன் பின், பிரச்சாரம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்பதால், நியூயார்க் நகரில் டாக்டர் மிஸ்ரா என்பவரது வீட்டில் தங்கினார். மிஸ்ராவின் மாயாவாத கொள்கைகள் ஒத்துவராததால், அங்கிருந்து கிளம்பி, சமுதாயத்தை உதறித் தள்ளிய ஹிப்பிக்கள் என்றழைக்கப்பட்ட இளைஞர்களும் யுவதிகளும் பெருமளவில் தங்கியிருந்த பவுரி என்னும் இடத்திற்குக் குடிபெயர்ந்தார். இந்தியாவில் கலாச்சாரம் நிறைந்த சூழ்நிலையில் வாழ்ந்து வந்த பக்திவேதாந்த சுவாமி, பவுரியில் அதற்கு நேர்மாறான சூழலில் வசிக்க நேர்ந்தது இளைஞர்களும் யுவதிகளும் போதை வஸ்துக்கள், மாமிச உணவு, தகாத பாலுறவு, சூதாட்டம் என பாவ வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். பகவான் சைதன்யரின் கருணையால் அனைவரும் கிருஷ்ண பக்தர்களாக முடியும் என்ற உறுதியான நம்பிக்கையுடன், பக்திவேதாந்த சுவாமி, திங்கள், புதன், வெள்ளிக் கிழமைகளில் அங்கு வருபவர்களுக்கு பகவத் கீதை மற்றும் பாகவதத்திலிருந்து உரையாற்றினார். இவற்றைக் கேள்விப்பட்ட பல இளைஞர்கள், அங்கு வந்து பாடவும் அவருடைய உரைகளைக் கேட்கவும் ஜபம் செய்யவும் ஆரம்பித்தனர். ஹிப்பிகளை கிருஷ்ண பக்தர்களாக மாற்றிய பக்திவேதாந்த சுவாமியின் சாதனையை பல்வேறு பத்திரிக்கைகளும் பாராட்டி செய்திகள் வெளியிட்டன.


டாம்கின்ஸ் பூங்காவில் நடைபெற்ற முதல் கீர்த்தனம்

காலப்போக்கில், பக்திவேதாந்த சுவாமி, வகுப்புகள் நடத்த உகந்த இடமாகக் கருதப்பட்ட நியூயார்க்கின் லோயர் ஈஸ்ட் சைடிற்கு தனது பணிகளை மாற்றினார். அங்கு சொற்பொழிவுகளும் பஜனைகளும் நடைபெற பலர் வந்து போக ஆரம்பித்தனர். அவர்களில் பலர் பக்திவேதாந்த சுவாமியிடம் தீட்சை பெற்று சீடர்களாயினர். அங்கிருந்த ஒரு பூங்காவில் சுவாமியும் அவரது சீடர்களும் மிகப்பெரிய கீர்த்தனை ஒன்றை நடத்த, அன்றிலிருந்து சொற்பொழிவிற்கு வருபவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமானது. இவ்வாறு அமெரிக்க மண்ணில் கிருஷ்ண பக்தி வேரூன்றத் தொடங்கியது.

## இஸ்கானின் தோற்றம்

கிருஷ்ண பக்தர்களின் கீர்த் தனைகளும் தத்துவங்களும் நாளுக்கு நாள் அமெரிக்க மக்களிடத்தில் பேரா தரவை பெற ஆரம்பித்தன. இச்சூழ் நிலையில், கிருஷ்ண பக்தியை மேலும் வளர்க்கும் பொருட்டு, அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கம்—இஸ்கான் (The International Society for Krishna Consciousness—ISKCON) என்னும் ஓர் இயக்கத்தை பக்திவேதாந்த சுவாமி அறிவித்து பதிவு செய்தார். அவருடைய சீடர்கள் அனைவரும் கிருஷ்ண பக்தி இயக்கத்தின் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டனர், மீண்டும் Back to Godhead பத்திரிக்கையைத் துவக்கி பிரச்சாரத்தை மிகவும் தீவிரப்படுத்தினர். இச்சூழ்நிலையில் பக்திவேதாந்த சுவாமி அவர்கள், உயர்ந்த ஆச்சாரியர்களுக்கு வழங்கப்படும் "பிரபுபாதர்" என்னும் பட்டத்தை ஏற்றுக் கொண்டார்.





## அமெரிக்காவில் இஸ்கானின் வளர்ச்சி

கிருஷ்ண பக்தி இயக்கம் நியூயார்க் நகரத்தோடு நின்றுவிடக் கூடாது என்றும், பல இடங்களிலும் பரவ வேண்டும் என்றும் விரும்பிய ஸ்ரீல பிரபுபாதர், தனது சீடர்களை சான்பிரான்சிஸ்கோவிற்கு அனுப்பி வைத்தார். பின்னர் பிரபுபாதரும் அங்கு சென்று பிரச்சாரம் செய்ய, கிருஷ்ண பக்தி மேன்மேலும் வளர்ந்தது. அவ்வளர்ச்சியின் சிகரமாக, பிரபுபாதரின் மேற்பார்வையில் மிகவும் பிரம்மாண்டமான ரதயாத்திரை ஒன்றினை பக்தர்கள் சீரும் சிறப்புமாக நடத்தினர். இதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் பல்வேறு நகரங்களிலும் கிருஷ்ண பக்தி பரவத் தொடங்கியது, பல்வேறு இடங்களில் ரதயாத்திரையும் நடைபெற்றது. மேலை நாடுகளில் முதன்முதலில் ரதயாத்திரை நடத்திய பெருமையையும் ராதாகிருஷ்ண விக்ரஹங்களை பிரதிஷ்டை செய்த பெருமையையும் பெற்றார் ஸ்ரீல பிரபுபாதர்.

## ஐரோப்பாவில் இஸ்கான்

லண்டனில் ஒரு மையம் துவக்க வேண்டும் என்ற ஆவல் பக்தர்களிடம் எழ, அதனை அவர்கள் பிரபுபாதரிடம் வெளிப்படுத்தினர். லண்டனில் பிரச்சாரம் செய்ய மூன்று இளம் தம்பதிகளை ஸ்ரீல பிரபுபாதர் அனுப்பி வைத்தார். ஆனால் அங்கு பிரச்சாரம் செய்வது அவ்வளவு சுலபமாக இல்லை. பிரபுபாதர் அங்குச் சென்றிருந்த சமயத்தில், கிருஷ்ணரின் கருணையால், பீட்டில்ஸ் என்னும் பிரபல இசைக்குழுவைச் சார்ந்த ஜார்ஜ் ஹாரிஸன் என்பவரை பிரபுபாதரின் சீடரான சியாமசுந்தர தாஸ் சந்தித்தார். கிருஷ்ண பக்தியின் தத்துவங்கள் ஜார்ஜிற்கு பிடித்திருந்ததால், ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தைப் பாடி பதிவு செய்து இசைத்தட்டாக வெளியிட்டார். அந்த இசைத்தட்டு மிகவும் பிரபலமடைய, லண்டன் மட்டுமின்றி ஐரோப்பா முழுவதிலும் கிருஷ்ண பக்தி வெகு விரைவாகப் பரவத் தொடங்கியது. லண்டனில் ராதாகிருஷ்ண விக்ரஹங்களை ஸ்ரீல பிரபுபாதர் மிகவும் விமரிசையான முறையில் பிரதிஷ்டை செய்த காட்சியை பிபிசி தொலைக்காட்சி நேரடியாக ஒளிபரப்பியது.



## இந்தியாவில் இஸ்கான்

மேற்கத்திய நாடுகளில் வெற்றியைக் கண்ட ஸ்ரீல பிரபுபாதர், தனது மேற்கத்திய நாட்டு சீடர்களை இந்தியாவிற்கு அழைத்து வந்து பிரம்மாண்டமான முறையில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தினார். 1970ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் கல்கத்தா டல்ஹௌசி சதுக்கத்தில் நடைபெற்ற கீர்த்தனம் இந்திய மக்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. படிப்படியாக ஹரே கிருஷ்ண இயக்கம் இந்தியாவிலும் வேரூன்ற ஆரம்பித்தது.



பிரபல தொழிலதிபர் டாடாவுடன் ஸ்ரீல பிரபுபாதர்



உலகெங்கும் பயணம் செய்த ஸ்ரீல பிரபுபாதர்

அதே ஆண்டின் அக்டோபர் மாதத்தில் பம்பாயில் தொடர்ந்து சில தினங்கள் நடைபெற்ற நிகழ்ச்சிகளும் அதில் ஸ்ரீல பிரபுபாதர் ஆற்றிய உரைகளும் மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றன. கிருஷ்ணரின் திருநாமங்களை பாடி ஆடுவதே ஆன்மீக வாழ்வின் உயர்நிலை என்பதை மக்களுக்கு உணர்த்திய பிரபுபாதர், தன் அமெரிக்க சிஷ்யர்களை அத்தகு கீர்த்தனத்தில் ஈடுபட வைத்து மிகச்சிறந்த முத்திரையைப் பதித்தார். அதனைத் தொடர்ந்து டிசம்பர் மாதத்தில் சூரத் நகரில் நடைபெற்ற மாபெரும் கீர்த்தன நிகழ்ச்சி ஒரு கோலாகலமான விழாவாக அமைந்தது. பல்வேறு பிரச்சனைகளுக்கு மத்தியில் பம்பாய் நகரின் ஜுஹு கடற்கரையில் பிரபுபாதர் கிருஷ்ணருக்கு ஆலயம் அமைக்க நிலத்தைப் பெற்று, கோவில் கட்டுமானப் பணிகள் தொடங்கின. சைதன்ய மஹாபிரபு தோன்றிய மாயாப்பூரிலும், கிருஷ்ணர் லீலை புரிந்த விருந்தாவனத்திலும் உலகமே வியக்கும் வண்ணம் கோயில் கட்டி அனைத்து உலக பக்தர்களும் விழாக்காலங்களில் ஒன்றுகூடி கிருஷ்ணருக்கு தொண்டு செய்ய வேண்டும் என்று விரும்பிய பிரபுபாதர், அக்கோவில்களை வெகு விரைவில் கட்டினார். மேலும் ஐதராபாத், நெல்லூர், சென்னை, திருப்பதி, அலகாபாத், புவனேஸ்வர், புதுடில்லி உட்பட இந்தியாவின் பற்பல இடங்களுக்கும் பயணம் செய்த அவர் கிருஷ்ண பக்தி இந்தியாவில் நன்கு பரவுவதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார்.

## உலகெங்கிலும் இஸ்கான்

1971, மே மாதத்தில் ஆஸ்திரேலியாவின் சிட்னி நகருக்கு விஜயம் செய்த பிரபுபாதர், அங்கு ஏற்கனவே செயல்பட்டு வந்த பிரச்சார மையங்களில் இருந்த பக்தர்களுக்கு உற்சாகமளித்து ஊக்கப்படுத்தினார். இவ்வாறு உலகின் அனைத்து இடங்களுக்கும் அவ்வப்போது சென்று அங்கிருந்த சீடர்களை அவர் வழிநடத்தினார். ரஷ்யாவின் மாஸ்கோ நகருக்குச் சென்ற பிரபுபாதர் அங்கும் கிருஷ்ண பக்திக்கு வித்திட்டார். ரஷ்யாவில் கிருஷ்ண உணர்வைப் பிரச்சாரம் செய்வது மிகவும் கடினமானதாக இருந்தது. (தற்போது ரஷ்யாவில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கிருஷ்ண பக்தியைப் பயின்று வருகின்றனர்)





சென்னை மாநகரில் ஸ்ரீல பிரபுபாதர்

பிரபுபாதர் தனது சீடர்களில் ஒருவரான பிரம்மானந்த ஸ்வாமியை ஆப்பிரிக்கர்களுக்கும் ஆப்பிரிக்காவில் வாழும் இந்தியர்களுக்கும் பிரச்சாரம் செய்வதற்காக ஆப்பிரிக்காவிற்கு அனுப்பினார். ஆப்பிரிக்கா கண்டம் முழுவதும் கிருஷ்ண உணர்வைப் பரப்புவதற்கான முழு திட்டத்தையும் வகுத்துக் கொடுத்த ஸ்ரீல பிரபுபாதர், தானும் அங்கு சென்று பிரச்சாரம் செய்தார்.

கிருஷ்ண பக்தியை உலகெங்கிலும் பரப்பும் பணியில் பிரபுபாதர் என்றுமே சோர்வடைந்ததில்லை. பதினொரு வருடங்களில் இவ்வுலகை பன்னிரண்டு முறை வலம் வந்து, அனைவரும் வியக்கும் வண்ணம் தனித்தன்மையான 108 கோவில்களை உலகம் முழுவதும் நிர்மாணித்தார். இதன் மூலம் கிருஷ்ண பக்தி என்னும் கிடைத்தற்கரிய பொக்கிஷத்தை உலக உயிர்வாழிகளுக்கு வழங்கினார். இஸ்கானை நிர்வகிப்பதற்காக ஜிபிஸி என்னும் குழுவினை ஏற்படுத்தி, உலகினைப் பல்வேறு பிராந்தியங்களாகப் பிரித்து ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் ஒவ்வொரு பக்தரை பொறுப்பாளராக அமர்த்தினார்.

## ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்கள்

பல்வேறு பொக்கிஷங்களை மக்களுக்கு அளித்த இந்த மகானின் மாபெரும் பொக்கிஷம் அவரது



அச்சிடப்படும் புத்தகங்களை மேற்பார்வையிடும் ஸ்ரீல பிரபுபாதர்

புத்தகங்கள். அயராது அகிலமெங்கும் பயணித்த பிரபுபாதர் தன் இலக்கியப் பணியை என்றுமே நிறுத்தியதில்லை. பல்வேறு புத்தகங்களை எழுதிய ஸ்ரீல பிரபுபாதர் அப்புத்தகங்களை தனது உயிர் மூச்சாகக் கருதினார்; பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவதம், சைதன்ய சரிதாம்ருதம் போன்றவை அவற்றில் மிகவும் முக்கியமானவை. தனது குருவின் ஆணையை சிரமேற்கொண்டு அப்புத்தகங்கள் பாரெங்கிலும் பரவப் பாடுபட்டார். புத்தக விநியோகத்தினால் தனது குரு திருப்தியடைவார் என்பதை உறுதியாக அறிந்திருந்த பிரபுபாதர் தனது சீடர்களிடம், "என்னைத் திருப்தி செய்ய வேண்டுமெனில் புத்தகங்களை விநியோகம் செய்யுங்கள்" என்று கட்டளையிட்டார். பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை (BBT) என்னும் ஓர் அறக்கட்டளையைத் தொடங்கி புத்தகங்கள் அச்சடிப்பதை முறைப்படுத்தினார்.

## பிரபுபாதரின் மறைவு

தனது முதிர்ந்த வயதில் பிரச்சார பணியினை அயராது செயல்படுத்திய பிரபுபாதர் அவ்வப்போது உடல்நிலைக் கோளாறுகளை சந்தித்து வந்தார். 1977ம் ஆண்டில் அவரது உடல்நிலை மிகவும் மோசமடைய அவர் விருந்தாவனம் வந்தடைந்தார். எவ்வித மருந்துகளையும் மருத்துவர்களையும் நாடாமல், எவ்வாறு இவ்வுலகை விட்டுச் செல்வது என்னும் கடைசி பாடத்தை தனது சீடர்களுக்கு விளக்கத் தீர்மானித்தார். அதன்படி, தொடர்ந்து இடைவிடாமல் கீர்த்தனம் செய்து கொண்டிருந்த பக்தர்களின் மத்தியில், ஸ்ரீல பிரபுபாதர் நவம்பர் 14ம் நாள், இரவு ஏழரை மணியளவில் விருந்தாவனத்திலுள்ள தனது அறையிலிருந்து இவ்வுலகை விட்டு புறப்பட்டு கிருஷ்ண லோகம் சென்றடைந்தார்.

## அனைவரின் நலனையும் விரும்பிய ஸ்ரீல பிரபுபாதர்

சாதி, மதம், இனம், மொழி என எந்தவொரு வேறுபாடுமின்றி, உலக மக்கள் அனைவரும் கூடி வாழ இல்லம் அமைத்த முதல் ஆன்மீக குரு ஸ்ரீல பிரபுபாதரே என்றால் அது மிகையாகாது. கிருஷ்ண உணர்வின் தத்துவங்களை மிகவும் ஆணித்தரமாக எடுத்துரைத்தும், போலியான கொள்கைகளை எதிர்த்து பலமாக வாதிட்டும், ஸ்ரீல பிரபுபாதர் ஒரு மிகச்சிறந்த பக்தர் எப்படி இருக்க வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டினார். அவர் இவ்வுலகிலிருந்து மறைந்து விடவில்லை, அவரது புத்தகங்களின் வாயிலாக இன்றும் மனித சமுதாயத்தை வழிநடத்திக்கொண்டுதான் உள்ளார். ஸ்ரீல பிரபுபாதருக்கும் அவர் கொண்டுவந்த புரட்சிகரமான கிருஷ்ண பக்தி வாழ்க்கை முறைக்கும் என்றுமே மறைவில்லை. கிருஷ்ணரின் நேரடிப் பிரதிநிதியான ஸ்ரீல பிரபுபாதர் தன் வாழ்நாள் முழுவதும் கிருஷ்ண பக்தியைப் பரப்புவதில் செலவழித்து, தன் குருவின் ஆணையையும் பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாப்பிரபுவின் விருப்பத்தையும் பூர்த்தி செய்தார். பாரெங்கும் பக்தியைப் பரப்பப் பாடுபட்ட பிரபுபாதரின் பாதச்சுவடுகளைப் பின்பற்றி அனைவரும் பரம பதம் அடைய முடியும். (ஸ்ரீல பிரபுபாதரின் முழு வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம், இஸ்கான் கோவில்களில் கிடைக்கும். பக்தர்கள் வாங்கி படித்து பயன்பெறுதல் நலன்.)

*மதன கோபால தாஸ் MCA, M.Phil, PhD, அவர்கள் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக கிருஷ்ண பக்தியைப் பயிற்சி செய்து வருகிறார், கரூரில் உள்ள தனியார் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.*



உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சீடர்களுடன் விருந்தாவனத்தின் இஸ்கான் கோவிலில் ஸ்ரீல பிரபுபாதர்

# மாதவன் அவதரித்த மதுரா

பிறப்பற்ற இறைவன் இவ்வுலகிற்கு இறங்கி வரும்போது, அவதாரம் என்று அறியப்படுகிறார். ஆன்மீக உலகமான கோலோக விருந்தாவனத்திலிருக்கும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் (மாதவன்) தனது பக்தர்களைக் காப்பதற்காகவும் துஷ்டர்களை அழிப்பதற்காகவும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும் சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு இப்பூவுலகில் தற்போதைய டில்லி நகரத்திலிருந்து 150 கிமீ தெற்கிலுள்ள மதுரா நகரில் தோன்றினார். இதனால் மதுரா நகரம் மிகவுயர்ந்த புண்ணிய பூமியாகும்.

## கிருஷ்ண ஜென்மஸ்தானம்

கிருஷ்ணர் அவதரித்த இடம், கிருஷ்ண ஜென்மஸ்தானம் என்றழைக்கப்படுகிறது. இங்கு பல்வேறு முறை கோவில்கள் கட்டப்பட்டுள்ளன. கிருஷ்ணரின் பேரன் வஜ்ரநாபன் சுமார் 5000 வருடங்களுக்கு முன்பு முதன்முதலில் இங்கு கோவில் கட்டினார். அதன் பின்னர் கி.மு. நான்காம் நூற்றாண்டில் சந்திரகுப்த விக்ரமாதித்யரால் மாபெரும் கோவில் எழுப்பப்பட்டது, அதன் அழகை வார்த்தைகளோ ஓவியங்களோ விளக்க இயலாது என்று கூறப்படுகிறது. பின்னர் அது கஜினி முகமதுவினால் இடிக்கப்பட்டது.

கி.பி. 1150ல் மற்றுமொரு கோவில் அங்கு கட்டப்பட்டது, சிகண்தர் லோடியின் காலத்தில் அதுவும் இடிக்கப்பட்டது.



பின்னர் ஜகாங்கீரின் ஆட்சிக் காலத்தில், மன்னர் வீர சிங்க தேவரால் 250 அடி உயரத்தில் மாபெரும் கோவில் கட்டப்பட்டது. ஆனால், 1669ல் ஔரங்கசீப் அதனை இடித்துவிட்டு அங்கு ஒரு மசூதியைக் கட்டினான்.

தற்போதைய கோவிலின் கட்டுமானப் பணி 1951ல் தொடங்கி, 1958ல் ராதா கிருஷ்ண விக்ரஹங்களை பிரதிஷ்டை செய்து திறக்கப்பட்டது.

கோவிலுக்கு அருகில் சிறைச் சாலையைப் போன்று வடிவமைக்கப்பட்டுள்ள ஓர் அறையில்தான் கிருஷ்ணர் அவதரித்ததாக சிலரும், பின்புறம் இருக்கும் வேறொரு இடத்தில்தான் அவர் அவதரித்தாக வேறு சிலரும் கூறுகின்றனர்.

## இதர இடங்கள்

யமுனைக் கரையிலுள்ள விஸ்ரம காட் என்னும் படித்துறையில்தான் கம்சனைக் கொன்ற பின் கிருஷ்ணர் ஓய்வெடுத்தார். ஹிரண்யாக்சனைக் கொன்ற வராஹரும் இங்குதான் ஓய்வெடுத்தார். கம்ச-திலா எனப்படும் குன்றில்தான் கிருஷ்ணர் கம்சனைக் கொன்றார், அதற்குப் பின்புறம் இருக்கும் இடத்தில்தான் உக்ரசேனரை மதுராவின் மன்னராக நியமித்தார். மல்யுத்த வீரர்களுடன் சண்டையிட்ட இடமும், கம்சன் வழிபட்ட சிவலிங்கமும் அதனருகில் உள்ளன.

### கிருஷ்ணரின் வாழ்க்கைக் குறிப்பு

கி.மு. 3228, ஜுலை 19ம் நாள், ஸ்ரவன மாத தேய்பிறையின் அஷ்டமி திதியின் நள்ளிரவில், மதுராவின் சிறைச்சாலையில் கிருஷ்ணர் குழந்தையாக அவதரித்தார், அன்றிரவே கோகுலம் சென்றடைந்தார்.

3 வருடம், 4 மாதங்கள் வரை கோகுலத்தில் வசித்த பின், விருந்தாவனம் சென்றார்.

மேலும் 3 வருடம் 4 மாதங்களை விருந்தாவனத்தில் கழித்த பின், 6 வருடம் 8 மாத வயதில், நந்தகிராமத்திற்கு இடம் பெயர்ந்தார்.

10 வருடம் 7 மாத வயதில் சைத்ர மாத தேய்பிறையின் பதினோராவது நாளில் கம்சனின் அழைப்பின் பேரில் மதுரா சென்றார். (கிருஷ்ணரின் திவ்யமான உடல் பத்து வயதைத் தாண்டி மாறுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது)

அன்றிலிருந்து பதினான்காவது நாளில் கம்சனைக் கொன்றார்.

18 வருடங்கள் 4 மாதங்கள் மதுராவில் வசித்த கிருஷ்ணர், 28 வயதில் துவாரகை கோட்டையை நிறுவி அங்கு வசிக்கத் தொடங்கினார்.

கி.மு. 3138, 90 வயதில் பகவத் கீதையை அர்ஜுனனுக்கு உபதேசித்தார்.

96 வருடங்கள் 8 மாதங்கள் துவாரகையில் வசித்த பின், கி.மு. 3102, பிப்ரவரி 18ம் நாள், 125 வயதில், பல்குன மாதத்தின் அமாவாசை அன்று இவ்வுலகிலிருந்து புறப்பட்டு, மீண்டும் ஆன்மீக உலகத்திற்குச் சென்றார்.

(ஆதாரம்: ஸ்ரீல விஸ்வநாத சக்ரவர்த்தி தாகூர் அருளிய பாகவத உரை)



மேலே: ஜென்மஸ்தான கோவிலின் அழகிய நுழைவாயில்

அதற்கும் மேலே: கோவிலின் பிரம்மாண்ட தோற்றம் (பழைய படம்)

# தமிழகத்தில் இஸ்கான்

*தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் திருப்பணிகள்—ஒரு பார்வை*

## சென்னை

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சென்னை கிளை இயற்கை எழில் சூழ்ந்த கிழக்குக் கடற்கரைச் சாலையின் அருகில் சுமார் 6 ஏக்கர் பரந்த நிலப்பரப்பில் எழிலுற அமைந்துள்ளது. ஸ்ரீ ருக்மிணி, சத்யபாமா சமேத கிருஷ்ணர், ஸ்ரீ ஜகன்னாத் பலதேவ் சுபத்ரா, ஸ்ரீ கௌர நித்தாய், மற்றும் ஸ்ரீ லட்சுமி நரசிம்மர் ஆகியோரின் விக்ரஹங்கள் பாஞ்சராத்ர விதிப்படி நேர்த்தியாக வழிபடப்பட்டு வருகின்றனர். பொது மக்கள் பலரும் பயன்படும் வகையில் நடைபெறும் பலதரப்பட்ட திருவிழாக்கள், குறிப்பாக ஜனவரி மாதத்தில் நடைபெறும் ரதயாத்திரை, அனைவருக்கும் கிருஷ்ண உணர்வினை அளித்து வருகிறது.



ஸ்ரீல பிரபுபாதரின் மூத்த சந்நியாசி சீடரும் உலகெங்கும் பயணம் செய்து கௌடிய வைஷ்ணவ தத்துவத்தை பிரச்சாரம் செய்பவருமான தவத்திரு பானு ஸ்வாமி அவர்கள் சென்னையை தனது செயல்களின் மையமாகக் கொண்டு, ஸ்ரீமத் பாகவதம் மற்றும் பகவத் கீதை உபன்யாசங்களை தொடர்ந்து இங்கு வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

முழு நேர பக்தர்களும் வெளியில் வேலை பார்க்கும் பக்தர்களும் இணைந்து நடத்தும் புத்தக விநியோகம் சென்னையின் சிறப்பம்சங்களில் ஒன்று. மாநகரின் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்து நாம சங்கீர்த்தனமும் நடைபெற்று வருகின்றது.

அசோக்நகர், கே.கே. நகர், மேற்கு மாம்பலம், அண்ணாநகர், வேளச்சேரி, கீழ்பாக்கம், தாம்பரம், ராஜா அண்ணாமலைபுரம், தி.நகர் உட்பட பல்வேறு இடங்களில் நாமஹட்டா மற்றும் பக்தி விருக்ஷ நிகழ்ச்சிகளின் மூலம் வைஷ்ணவ சம்பிரதாயத்தின் கருத்துக்கள் சென்னை மக்களுக்கு புகட்டப்பட்டு வருகின்றன.

பக்த பிரகலாத பள்ளி என்ற பெயரில் சிறுவர் சிறுமிகளுக்காக இயங்கும் நிகழ்ச்சி, 20க்கும் மேற்பட்ட இடங்களில், குழந்தைகளுக்கு பக்தியையும் இந்திய கலாச்சாரத்தையும் கற்றுக் கொடுக்கின்றது. இஸ்கானின் இளைஞர் பிரிவினர்களுக்காக வாரந்தோறும் நடைபெறும் சிறப்பு பயிற்சியில் 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டு வேத தத்துவங்களை அறிவியல் பூர்வமாக உணர்ந்து கொள்கின்றனர். ஒவ்வொரு வாரம் ஞாயிற்றுக்கிழமை மதியத்தில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். ஐ.ஐ.டி கல்லூரி, வைஷ்ணவ கல்லூரி, மத்திய சிறைச்சாலை போன்ற இடங்களிலும் வாரந்தோறும் பிரச்சாரப் பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

சுமார் 20 பசுக்களையும் கன்றுகளையும் கொண்ட முழுமையான பசுமடம் அனைத்து வசதிகளுடன் கோவில் வளாகத்திலேயே உள்ளது.



சென்னை மாநகரில் மிகவும் பிரம்மாண்டமான கோவில் கட்டப்பட வேண்டும் என்று ஸ்ரீல பிரபுபாதர் விரும்பினார். அவரின் விருப்பத்தை நிறைவேற்றும் பொருட்டு, ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணருக்காக மிகவும் வசீகரமான ரம்யமான ஒரு கோவிலைக் கட்டுவதற்கான முதற்கட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன. சுமார் 8 கோடி செலவில் தற்போது கட்டப்பட்டு வரும் கோவிலின் கீழ்த்தளத்தில் பிரசாத விநியோகக் கூடமும், முதல் தளத்தில் கலாச்சாரக் கூடமும், இரண்டாம் தளத்தில் கோவிலும் அமைந்துள்ளன. கட்டுமானப் பணிகள் ஏறத்தாழ முடிவுற்ற நிலையில், உட்புற வேலைகளும் கோபுர வேலைகளும் மீதமுள்ளன. இன்னும் ஓர் ஆண்டில் அவை நிறைவேறிய பின், லலிதா, விசாகாவுடன் கூடிய ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணரின் விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்படுவர். வருங்காலத்தில் மாபெரும் பிரம்மாண்டமான கோவில் கட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கோயம்புத்தூர்

கோயம்புத்தூரில் இயங்கி வரும் இஸ்கான் கிளை, கடந்த 25 வருடங்களுக்கு மேலாக கோவை மக்களின் மத்தியில் ஓர் ஆன்மீக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது. சுமார் 8 ஏக்கர் நிலப்பரப்பில் கோவை விமான நிலையம் அருகில் அமைந்துள்ள இத்திருக்கோவில் காண்பவரைக் கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ ஜகன்னாத் பலதேவ் சுபத்ராவின் விக்ரஹங்கள் இங்கு வரும் மக்களுக்கு அருள்பாலித்து வருகின்றனர்.

பத்து வருடத்திற்கும் மேலான பக்தர்களின் உழைப்பு, உறுதி, மற்றும் பக்தியின் மூலம் இத்திருக்கோவிலின் கட்டுமானப் பணிகள் 2001ல் நிறைவுற்று, அவ்வருடம் பிப்ரவரி 4ம் நாள்





மிகவும் விமரிசையான முறையில் வேத மந்திரங்கள் முழங்க, ஆழ்வார்களின் திவ்ய பிரபந்தங்கள் காதுகளுக்கு இனிமை சேர்க்க, ஹரே கிருஷ்ண மஹாமந்திர கீர்த்தனைகளுடன் கும்பாபிஷேகம் செய்து திறக்கப்பட்டது. கோவில் திறக்கப்பட்ட சில நாள்களில் (16 பிப்ரவரி, 2001) அப்போதைய பிரதமர் திரு. அடல் பிகாரி வாஜ்பாய் அவர்கள் கோவிலுக்கு வருகை புரிந்து, கோவிலின் ஒரு பகுதியை திறந்து வைத்தார் என்பதும், சுமார் அரை மணி நேரத்தை பக்தர்களுடன் கழித்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பல்வேறு வைஷ்ணவ திருவிழாக்கள் பிரம்மாண்டமான முறையில் ஆயிரக்கணக்கான பக்தர்களுடன் நடைபெற்று வருகின்றன, குறிப்பாக ஜனவரி மாதத்தில் நடைபெறும் ரதயாத்திரை நிகழ்ச்சி கோவை மாநகர மக்கள் அனைவருக்கும் மிகச்சிறந்த பலனை நல்கி வருகிறது.

ஞாயிறு சிறப்பு நிகழ்ச்சி, கல்லூரி மாணவர்களுக்கான சிறப்புப் பயிற்சிகள், வீடுகளில் நடைபெறும் வகுப்புகள், சிறுவர் சிறுமிகளுக்கான வகுப்புகள் என பல்வேறு வழிமுறைகளைக் கொண்டு மக்களிடம் கிருஷ்ண பக்தி பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது. அனைத்து பக்தர்களும் கிருஷ்ண பக்தியின் தத்துவங்களை நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக பக்தி சாஸ்திரி பாடத்திட்டங்கள் பக்தர்களுக்குக் கற்றுத் தரப்படுகின்றன.

கிருஷ்ண பக்தியை பரவலாக பிரச்சாரம் செய்வதற்காக, இத்திருக்கோவிலின் முதல்வர், தவத்திரு. பக்தி வினோத ஸ்வாமி என்ற பெயருடன் சமீபத்தில் சந்நியாசம் ஏற்றுக் கொண்டார் என்பது கோவை பக்தர்களுக்கு மட்டுமின்றி தமிழக இஸ்கான் இயக்கத்திற்கே மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

## மதுரை

மதுரை மண்ணில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இன்று மதுராபதியாக வீற்றிருக்கிறார் என்பது மதுரை வாழ் மக்களுக்கு கிடைத்த ஒரு பொக்கிஷம் என்றால் மிகையில்லை. 1996ல் மதுரை-சிம்மக்கல் அருகே ஒரு வாடகைக் கட்டிடத்தில் துவங்கிய இஸ்கான் மதுரை கிளை, தனது நிகழ்ச்சிகளினாலும் சேவைகளினாலும் மாணவர்கள் மற்றும் குடும்ப அங்கத்தினர்களின் நல்லாதரவை பெற்றது. அதன் பலனாக, மணிநகரத்தின் பிரதான சாலையில் சுமார் 5 ஆயிரம் சதுர அடி நிலப்பரப்பில் 1998ல் கோவிலின் கட்டுமானப் பணிகள் தொடங்கின.





முழுநேர பக்தர்களின் நேரடிக் கண்காணிப்பில் நடைபெற்ற இத்திருப்பணி சுமார் மூன்று வருடங்களில் முடிவுற்றது. 2001ம் வருடம், மே மாதம் ருக்மணி துவாதசி அன்று நடைபெற்ற கும்பாபிஷேகத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர், ஸ்ரீமதி ராதா ராணியுடன் "ராதா மதுராபதியாக" எழுந்தருளினார். பிரம்மாண்டமான வளைவுடனும், கலசங்களுடனும் காட்சியளிக்கும் இத்திருக்கோயில் மற்றும் யோகா வளாகம், சுமார் ஒரு கோடி ரூபாய் செலவில் மிகவும் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. எட்டு விதமான உலோகங்களால் செய்யப்பட்டு, புன்சிரிப்புடனும், உருக்கிய பொன்னிறத்துடனும் காணப்படும் திருவிக்ரஹங்களை தமிழகத்தில் வேறு எங்கும் காண முடியாது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மாணவர்களை நல்வழிப்படுத்துவதில் கவனம் செலுத்தும் மதுரை இஸ்கான், மதுரை தியாகராசர், கேஎல்என், திண்டுக்கல் ஆர்விஎஸ் உட்பட பல பொறியியல் கல்லூரிகளில் மாணவர்களுக்காக யோகா விளக்க வகுப்புகளை நடத்துகின்றது. தவிர மாதந்தோறும் கோயில் யோகா வளாகத்தில் மாணவர்களுக்கென சிறப்பு யோகா கேம்ப்கள் நடத்தப்படுகின்றன. இவற்றின் பலனாக, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், "தன்னையறியும் விஞ்ஞானம்", "யோகத்தில் பூரணத்துவம்" ஆகிய பிரபுபாதரின் இரண்டு புத்தகங்களை பொறியியற் கல்லூரி பயிலும் முதல்நிலை மாணவர்களுக்கு, பெர்சனாலிட்டி டெவலப்மென்ட் பிரிவில் பாடப்புத்தகமாக அங்கீகரித்தது.

ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்கள், மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் குறைந்த நன்கொடையில் விநியோகிக்கப் பட்டு வருகின்றன. குறிப்பாக 'பகவத்கீதை - உண்மையுருவில்' என்னும் புத்தகம், இன்று மதுரை மக்களில் பெரும்பாலானோரை சென்றடைந்துள்ளது.

மதுரை மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழும் மக்களின் நலனைக் கருதி, அந்தந்த பகுதியிலுள்ள திருமண மஹால் அல்லது மீட்டிங் ஹாலில் ஹரே கிருஷ்ண மஹாமந்திர தியானம், பகவத் கீதை, ஸ்ரீமத் பாகவத சிறப்புரைகள் மற்றும் ஹரிநாம பஜனையும் நடைபெறுகின்றன. 'மக்கள் நல மஹால் நிகழ்ச்சி' என்ற பெயரில் நடைபெறும் இந்நிகழ்ச்சி அப்பகுதியில் உள்ள மக்கள் பெருவாரியாக பயனடைந்து வருகின்றனர்.

ஞாயிறுதோறும் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள், உள்ளூர் மற்றும் தொலைதூர பக்தர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், காலையிலும் மாலையிலும் இரு நிகழ்ச்சிகளாக நடத்தப்படுகின்றன.

இவை தவிர கோயிலில் தினசரி ஆறுகால பூஜைகள் நடைபெறுகின்றன. உச்சிக்கால பூஜைக்கு பின்பு சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு கிருஷ்ண பிரசாதம் வழங்கப்படுகிறது. கோயிலுக்குள் வந்து செல்லும் ஒவ்வொரு நபரும் கிருஷ்ண பிரசாதத்தை பெற்றுச் செல்லும் வண்ணம் பிரசாத விநியோகம் நடைபெறுகிறது.

## திருநெல்வேலி

புண்ணிய நதியாம் தாமிர பரணிக் கரையில் ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண பலராமருக்கு ஓர் அழகிய ஆலயத்தினை இஸ்கான் திருநெல்வேலி அமைத்துள்ளது.





2003ல் பாளையங் கோட்டை அருகில் ஒரு வாடகைக் கட்டிடத்தில் துவங்கி, விரைவிலேயே 2004ல் நகரத்தின் முக்கிய சாலையான திருவனந்த புரம் சாலையில் சுமார் 7,500 சதுர அடி நிலம் வாங்கப்பட்டு, சிறிய குடில் ஒன்றில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கப் பட்டன. மிகவும் குறுகிய காலத்திலேயே நெல்லை மக்கள் பலரின் ஆதரவைப் பெற்றதால், 2006ம் வருடம் ஜனவரி 11ம் நாள் கும்பாபிஷேகம் செய்யப் பட்டு புருஷோத்தமர்களான கிருஷ்ண பலராமரின் விக்ரஹங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

சுமார் 1.2 கோடி ரூபாய் செலவில் மிகவும் நேர்த்தியான முறையில் அமைக்கப்பட்டுள்ள இக்கோவிலில், தாமிர பரணியில் பலராமர் ஸ்நானம் செய்ததை நினைவுபடுத்தும் பொருட்டு, ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண பலராமரின் திருவிக்ரஹங்கள் இங்கு எழுந்தருளச் செய்யப்பட்டுள்ளனர். தமிழகத்திலேயே இங்கு தான் இது போன்ற அஷ்டதாதுவாலான கிருஷ்ண பலராமர் விக்ரஹங்கள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வாரத்தின் கடைசி நாட்களில் ஏராளமான மக்கள் வருவதுடன் தினமும் நூற்றுக்கணக்கான மக்கள் கிருஷ்ண பலராமரை தரிசித்துச் செல்கின்றனர். நகரின் பிரதான சாலையில் அமைந்துள்ளதால் உள்ளூர், வெளியூர் என அனைத்து வசிப்பிட மக்களும் பயன்பெறும் வண்ணம் உள்ளது.

கோயிலின் கீழ் தளத்தில் உள்ள யோகா வளாகத்தில், கல்லூரி மாணவர்கள் மற்றும் குடும்ப அங்கத்தினர்களுக்கான யோகா கேம்ப்கள் அவ்வப்போது நடைபெறுகின்றன. திருநெல்வேலி மருத்துவ கல்லூரி, வேளாண்மை கல்லூரி, சங்கர் பாலிடெக்னிக் உட்பட பல கல்வி நிறுவனங்களிலும் யோகா விளக்க வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது.

ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்கள், மாணவர்களிடமும் பொதுமக்களிடமும்குறைந்தநன்கொடையில்விநியோகிக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக 'பகவத்கீதை - உண்மையுருவில்' என்னும் புத்தகம், இன்று நெல்லை மக்களில் ஏராளமான பேரைச் சென்றடைந்துள்ளது.

திருநெல்வேலி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள திருமண மஹால் அல்லது மீட்டிங் ஹாலில் நடைபெறும், 'மக்கள் நல மஹால் நிகழ்ச்சி' அப்பகுதியிலுள்ள மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

ஞாயிறுதோறும் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகள், உள்ளூர் மற்றும் தொலைதூர பக்தர்கள் அனைவரும் பயன்பெறும் வகையில், காலையிலும் மாலையிலும் இரு நிகழ்ச்சிகளாக நடத்தப்படுகின்றன. இவை தவிர கோயிலில் தினசரி ஆறுகால பூஜைகளும், உச்சிக்கால பூஜைக்கு பின்பு சுமார் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு கிருஷ்ண பிரசாத விநியோகமும் நடைபெறுகின்றது.

## சேலம்

மலைகள் சூழ்ந்து மாங்கனிக்குப் பெயர் பெற்ற மாநகரமாம் சேலத்தில், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் சார்பில் கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக கிருஷ்ண பக்திப் பிரச்சாரம் நடைபெற்று வருகின்றது. முதலில் சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட இம்மையம், ஸ்ரீல பிரபுபாதரின் கருணையாலும் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவின் கருணையாலும் இன்று 3.2 ஏக்கர் பரப்பளவில் மாபெரும் கோவிலாக வளர்ச்சி பெற்றுள்ளது. இஸ்கான் கோவில்களுக்கு ஸ்ரீல பிரபுபாதர் காட்டிய நெறிப்படி, பூஜைகளும் ஸ்ரீமத் பாகவத வகுப்புகளும் தினமும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

எட்டு வெளி நாட்டு பக்தர்கள் உட்பட 30க்கும் மேற்பட்ட பிரம்மச்சாரிகளுடன் சீரும் சிறப்புமாக விளங்கும் இத்திருக்கோயில், பிரபுபாதரின் புத்தகங்களை விநியோகிப்பதில் தனக்கென ஒரு சிறப்பிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது.



கௌடிய வைஷ்ணவர் களின் கலாச்சாரம் கீர்த்தனமே என்பதை உணர்த்தும் பொருட்டு, இங்கு கீர்த் தனத்திற்கு முக்கியத் துவம் கொடுக்கப்படு கிறது, கோவிலில் நடைபெறும் கீர்த் தனங்களும் வீதிகளில்


அடிக்கடி நடைபெறும் கீர்த்தனங்களும் பொதுமக்களை கவர்ந்து, சேலம் பிரச்சார மையத்திற்கு தனிச்சிறப்பு அளிக்கின்றன. ஞாயிறுதோறும் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியில், சுமார் 250 பேர் கலந்து கொண்டு, பஜனை, ஆரத்தி, கீர்த்தனம், பகவத் கீதை உபன்யாசம், மற்றும் பிரசாத விநியோகத்தில் பங்கு கொண்டு பலன் பெறுகின்றனர். மேலும், பல்வேறு கல்லூரி மாணவர்களுக்குத் தனிப்பட்ட பயிற்சிகளை வழங்குவதன் மூலம் கிருஷ்ண பக்தி புகட்டப்படுகிறது. இல்லறத்தவரின் இல்லங்களில் நடைபெறும் பிரச்சார வகுப்புகள், மாநகரம் முழுவதும் நடைபெறும் பிரசாத விநியோகம், மிகப்பெரிய அளவில் விளம்பரங்களுடன் நடைபெறும் பொது நிகழ்ச்சிகள், திருவிழாக்கள் (குறிப்பாக, 15,000க்கும் மேற்பட்ட மக்கள் கூடும் கிருஷ்ண ஜெயந்தி) போன்றவை மக்களை பெரிதும் கவர்ந்து வருகின்றன. சேலம் மற்றும் நாமக்கல் நகரின் உள்ளூர் தொலைக்காட்சியில் "தன்னையறியும் விஞ்ஞானம்" என்ற பெயரில் ஒவ்வொரு வாரமும் நடைபெறும் நேரடி ஒளிபரப்பு நிகழ்ச்சிகள் சுமார் 8 லட்சம் நபர்களைச் சென்றடைகின்றன. நாமக்கல் நகரில் ஒரு நாமஹட்டா நிலையம் தொடங்கப்பட்டு அங்கும் பிரச்சார பணிகள் சிறப்பாக நடந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும். அவ்வப்போது ஈரோட்டிலும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகின்றது.



"எளிய வாழ்க்கை, உயர்ந்த சிந்தனை" என்னும் பிரபுபாதரின் விருப்பத்தை நிறைவேற்ற, கோவிலின் பிரம்மச்சாரிகள், மின்சாரம், சமையல் எரிவாயு ஆகியவற்றை தவிர்த்து, விளக்குகள், விறகு போன்றவற்றின் உதவியுடன் எளிமையாக வாழ்ந்து வேத கலாச்சாரத்தை ஆச்சாரியர்கள் காட்டிய வழியில் அனுசரித்து வருகின்றனர். கோவிலுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்கனவே உள்ள நிலையில், பிரம்மச்சாரி ஆஸ்ரமத்தின் கட்டுமானப் பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. தற்போது கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் அனைத்தும் சிமெண்டும் இரும்புக் கம்பிகளும் இன்றி, இயற்கையான முறையில் கட்டப்பட்டுள்ளன. மேலும், விருந்தினர் மாளிகை, உணவகம், பிரசாத விநியோக கூடம், திறந்தவெளி அரங்கு, பூங்கா, நூலகம், போன்றவற்றுடன் கூடிய பிரம்மாண்டமான ராதா கிருஷ்ணர் கோவில், அடுத்த கட்டப் பணியாக விரைவில் தொடங்கப்பட உள்ளது.

## வேலூர்

கோட்டை மாநகரமான வேலூரில் காந்தி நகரின் மையத்தில் அமையப்பெற்றுள்ள இஸ்கான் மையம், ஸ்ரீ சைதன்யரின் விருப்பத்தையும் இஸ்கானின் ஸ்தாபக ஆச்சாரியரின்



விருப்பத்தையும் நிறைவேற்றும் வண்ணம்கிருஷ்ண பக்தியினை பிரச்சாரம் செய்து வருகிறது. எட்டு முழு நேர பிரம்மச்சாரிகளுடன் செயல்படும் இம்மையத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பலதரப்பட்ட மக்கள் கலந்து கொண்டு ஆன்மீகப் பலனை அடைகின்றனர். ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, ராம நவமி, நரசிம்ஹ சதுர்தசி, கௌர பூர்ணிமா போன்ற திருவிழாக்களின் போதும், ஞாயிறுதோறும் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியின்போதும் ஏராளமானோர் கலந்துகொண்டு பயன் பெறுகின்றனர்.

ஆற்காடு, ஆம்பூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், காவேரிபாக்கம், காவனூர், வின்னமங்கலம், வேலப்பாடி, விரிஞ்சிபுரம் போன்ற இடங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகள், காஞ்சிபுரத்தில் நடைபெறும் கல்லூரி நிகழ்ச்சி, பிரசாத விநியோகம் மற்றும் புத்தக விநியோகம் போன்றவற்றின் மூலம் மக்களுக்கு ஆன்மீக அறிவு புகட்டப்பட்டு வருகிறது.

இங்கு கொடுக்கப்படும் உபன்யாசங்கள் குருந்தட்டுகளில் (cdக்களில்) பதிவு செய்யப்பட்டு தமிழ் பேசும் மக்களின் நன்மைக்காக விநியோகம் செய்யப்படுகின்றன. மேலும், இங்கு கொடுக்கப்பட்ட இராமயண தொடர் சொற்பொழிவு, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலுள்ள 16 உள்ளூர் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. விரைவில் தமிழ் உபன்யாசங்களை சர்வதேச தொலைக்காட்சிகளில் ஒளிபரப்புவதற்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

விரைவில் மிகப்பெரிய நிலம் வாங்கி, அங்கு ராதா கிருஷ்ணர் கோவிலைக் கட்டுவதற்கான பணிகளும் நடைபெற்று வருகின்றன.

## ஸ்ரீரங்கம்

அரங்கநாதர் அருள்பாலிக்கும் ஸ்ரீரங்கச் சேத்திரம், பூலோக வைகுண்டம் என்றழைக்கப்படுகிறது. சைதன்ய மஹாபிரபு தனது தென்னிந்திய யாத்திரையின் போது இங்கு தான் நீண்ட காலத்தைக் கழித்தார். இத்தகு புனித ஸ்தலமாக விளங்கும் ஸ்ரீரங்கத்தில் இயங்கும் இஸ்கான் மையம், இங்கு வருகை தரும் பக்தர்களை உபசரிப்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. விருந்தோம்பலை முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, வருடம் முழுவதும் இங்கு வருகை தரும் பக்தர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளும் இங்கு செய்யப்படுகின்றன. அரங்கநாதரை தரிசிப்பதற்கும், சைதன்ய மஹாபிரபுவுடன் தொடர்புடைய இடங்களை குறிப்பாக வெங்கடபட்டரின் வீட்டினை தரிசிப்பதற்கும் பக்தர்களுக்கு உதவி செய்யப்படுகிறது.

இங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஜகன்னாதர், பலதேவர் மற்றும் சுபத்ரையின் விக்ரஹங்கள் அனைவரையும் கவரும் வண்ணம் உள்ளனர். திருச்சி மாவட்டம் விவசாயத்தை முக்கியமாகக் கொண்டுள்ளதால், கிராமப்புற பிரச்சாரத்தில் நிறைய பக்தர்கள் ஈடுபட்டுள்ளனர். அதன் மூலம் பக்தர்களின் எண்ணிக்கை பெருகி வருகின்றது. சமீபத்தில் இணைந்த முழு நேர பிரம்மச்சாரிகள், ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களை மக்களுக்கு விநியோகிப்பதில் தீவிரம் காட்டி வருகின்றனர். விரைவில் பரந்த நிலப்பரப்பில் கோசாலை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## கும்பகோணம்

வடக்கில் காவிரியும் தெற்கில் ஹரிசொல்லாறும் பாய்ந்து ஓட, இடையில் குடந்தை என்றழைக்கப்படும் கோவில் நகரமாம் கும்பகோணம் அமைந்துள்ளது. எம்பெருமானின் ஸ்ரீ சுதர்சன சக்கரத்தை சூரிய தேவன் இங்கு வழி பட்டதால், இதற்கு பாஸ்கர க்ஷேத்திரம் என்னும் மற்றொரு பெயரும் உண்டு. இப்புண்ணிய பூமியில் ''இஸ்கான், கும்பகோணம்'' கடந்த பத்து வருடங்களாக பிரச்சாரப் பணியில் ஈடுபட்டு வருகிறது. பல்வேறு இல்லங்களிலும் கிராமங்களிலும் கிருஷ்ண பக்தி பரவலாகப் பரவி வருகிறது, கோவில் தேர் திருவிழாக்களின் போது நகர சங்கீர்த்தனம், பிரசாத விநியோகம், புத்தக விநியோகம் ஆகியவற்றின் மூலம் திருப்பணிகள் நடந்து வருகின்றன.





முக்கிய திருவிழாக்களான கிருஷ்ண ஜெயந்தி, கௌர பூர்ணிமா போன்ற நிகழ்ச்சிகளின் போது, பள்ளிக் குழந்தைகளுக்கான போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள், மற்றும் கலை நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. கும்பகோணத்தைச் சுற்றியுள்ள திவ்ய தேசங்களை தரிசிக்க பக்தர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் இஸ்கான் கும்பகோணம் திகழ்கிறது. பக்தர்கள் கிருஷ்ண பக்தியில் மேலும் முன்னேற ''பக்தி சாஸ்திரி'' பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு கடந்த இரு வருடங்களாக நடத்தப்பட்டு வருகின்றன. தற்போது, புதிய கோவில் கட்டும் திருப்பணிக்காக ஓர் ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு, கட்டுமான பணிகள் கூடிய விரைவில் தொடங்கப்பட உள்ளன. அதில் கோசாலைகள், உயர்கல்வி கூடங்கள், அன்னதான கூடங்கள், அகண்ட நாம சங்கீர்த்தனங்களும் அடங்கும்.

## நாகர்கோயில்

இரண்டு வருட காலமாக இயங்கி வரும் நாகர்கோயில் மையம் குறுகிய காலத்தில் பெரும் வளர்ச்சி கண்டு வருகின்றது. ஸ்ரீ ஸ்ரீ ராதா மாதவ விக்ரஹங்களின் கருணையினால், ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி, கௌர பூர்ணிமா, நரசிம்ம சதுர்தசி, பானிஹாட்டி ஆகிய திருவிழாக்கள் இங்கு விமரிசையாகக் கொண்டாடப்படுகின்றன. குழந்தைகளை கிருஷ்ண பக்தர்களாக் குவதற்கான போட்டிகளின் பரிசளிப்பு விழா, உரியடி, கிருஷ்ணரைப் பற்றிய சொற்பொழிவுகளுடன் நடைபெறும் கிருஷ்ண ஜெயந்தி நிகழ்ச்சி பலரைக் கவர்வது உண்மையே.



ஒவ்வொரு வாரமும் ஞாயிறு மதியம் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட பக்தர்கள் கூடுகின்றனர். பஜனை, ஆரத்தி, பகவத் கீதை சொற்பொழிவு, கீர்த்தனம், பிரசாத விநியோகம் ஆகியவற்றினால் அனைவரும் பயனடைகின்றனர். வாரத்தின் இறுதி நாட்களிலும், உள்ளூர் திருவிழாக்களிலும், பொருட்காட்சிகளிலும் புத்தக விநியோகம் சிறப்பாக நடைபெறுகின்றது. ஸ்ரீல பிரபுபாதரின் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டு பள்ளிக் குழந்தைகளுக்கு ஆன்மீக அறிவினைப் புகட்டுவதிலும் நாகர்கோயில் மையம் ஆர்வம் காட்டி வருகின்றது. மார்த்தாண்டம் உட்பட கன்னியாகுமரி மாவட்டத்தின் 12 இடங்களில் ஒவ்வொரு வாரமும் சத்சங்க நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.



## ஓசூர்

கடந்த பத்து வருடங்களுக்கும் மேலாக இயங்கி வரும் அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஓசூர் கிளை, நகரத்தின் முக்கியப் பகுதியான நேதாஜி ரோட்டில் உள்ள இராமர் கோவில் வளாகத்தில் அமைந்துள்ளது.

வாரந்தோறும் சனிக்கிழமை மாலை நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியும், அவ்வப்போது நடைபெறும் திருவிழாக்களும் மக்களுக்கு கிருஷ்ண பக்தியை வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

பாகலூர் அருகே 2 ஏக்கர் நிலம் வாங்கி அங்கு ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணருக்கு பிரம்மாண்டமான கோவில் கட்டுவதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தினை தொடர்ந்து இப்பத்திரிக்கையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் வெளியிட உள்ளோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் காண்டம், ஸ்லோகம் ஒன்று

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய
ஜன்மாத்-யஸ்ய யதோ (அ)ன்வயாத் இதரதஸ் சார்தேஷ்-வபிக்ஞ ஸ்வராட்
தேனே ப்ரஹ்ம ஹ்ருதா ய ஆதி-கவயே முஹ்யந்தி யத் ஸூரய:
தேஜோ-வாரி-ம்ருதாம் யதா வினிமயோ யத்ர த்ரி-ஸர்கோ (அ)ம்ருஷா
தாம்னா ஸ்வேன ஸதா நிரஸ்த-குஹகம் ஸத்யம் பரம் தீமஹி

**எம்பெருமானே, ஸ்ரீ கிருஷ்ணா, வஸுதேவரின் புதல்வனே, எங்கும் வியாபித்திருக்கும் முழுமுதற் கடவுளே, தங்களுக்கு எனது பணிவான வணக்கங்களை நான் சமர்ப்பிக்கின்றேன். தோற்றுவிக்கப்பட்டுள்ள பிரபஞ்சங்களின் படைத்தல், காத்தல் அழித்தல் ஆகிய காரணங்களுக்கு மூல காரணமாகவும், பூரண உண்மையாகவும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் இருப்பதால் அவரை நான் தியானிக்கிறேன். எல்லாத் தோற்றங்களையும் அவர் நேரடியாகவோ மறைமுகமாகவோ அறிந்துள்ளார், மேலும் அவருக்கு அப்பால் வேறெந்த காரணமும் இல்லாததால் அவர் சுதந்திரமானவராவார். முதல் ஜீவனான பிரம்மாவின் இதயத்தில் ஆதியில் வேத அறிவைப் புகட்டியவர் அவரே. நெருப்பினுள் காணப்படும் நீராகவும், நீர் மேல் காணப்படும் நிலமாகவும் தோற்றமளிக்கும் மாயாஜாலத்தினால் ஒருவன் குழப்பமடைவதைப் போல், பெரும் முனிவர்களும், தேவர்களும் கூட ஸ்ரீ கிருஷ்ணரால் மாயையினுள் வைக்கப்பட்டுள்ளனர். இயற்கையின் முக்குண பிரதிபலன்களால் தற்காலிகமாக தோற்றுவிக்கப்பட்டுள்ள ஜடப் பிரபஞ்சங்கள் பொய்யானவை என்ற போதிலும், அவை உண்மையானவையாக காட்சியளிப்பதற்கு உரிய ஒரே காரணப் பொருளும் அவரேயாவார். எனவே, ஜட உலக மாயைகளிலிருந்து நிரந்தரமாக விடுபட்டு, தெய்வீக உலகில் நித்திய வாசம் புரியும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் மீது நான் தியானம் செய்கிறேன். அவரே பூரண உண்மை என்பதால் நான் அவரை தியானிக்கின்றேன்.**

**பொருளுரை:** முழுமுதற் கடவுளாகிய வாஸுதேவருக்கு வணக்கங்கள் எனும் வாக்கியம், தேவகி, வஸுதேவர் ஆகியோரின் தெய்வீகப் புதல்வரான பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை நேரடியாகக் குறிக்கின்றது. இவ்வுண்மை இன்னும் தெளிவாக இந்நூலின் பதங்களில் விளக்கப்படும். ஸ்ரீ கிருஷ்ணரே மூல முழுமுதற் கடவுள் என்றும், மற்றவர்கள் அனைவருமே அவரது நேரடி அங்கங்கள், அல்லது மறைமுக அங்கங்கள், அல்லது அங்கத்தின் அங்கங்களே என்றும் ஸ்ரீ வியாஸதேவர் இங்கு வலியுறுத்துகிறார். இந்த விஷயத்தை ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி தமது கிருஷ்ண ஸந்தர்பத்தில் இன்னும் தெளிவாக விளக்கியுள்ளார். மேலும், தமது பிரம்ம சம்ஹிதை எனும் காவியத்தில், முதல் ஜீவராசியாகிய பிரம்மா ஸ்ரீ கிருஷ்ணரைப் பற்றிய விஷயத்தை ஆணித்தரமாக விளக்கியுள்ளார். ஸ்ரீ கிருஷ்ணர், தேவகியின் தெய்வீகப் புதல்வர் என்று ஸாம வேத உபநிஷத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த பிரார்த்தனையின் முதல் வாக்கியம், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே மூல முழுமுதற் கடவுள் என்பதை ஏற்கின்றது. அந்த பூரணமான முழுமுதற் கடவுளுக்குச் சொந்தமாக ஏதேனும் ஒரு தெய்வீக பெயர் இருக்குமாயின், அது, “எல்லா கவர்ச்சியும் உடையவர்” என்று பொருள்படும், கிருஷ்ண என்னும் திருப்பெயராகத்தான் இருக்க வேண்டும். பகவத் கீதையின் பல்வேறு இடங்களில், தாமே மூல முழுமுதற் கடவுள் என்பதை பகவானே வலியுறுத்துகிறார், அதனை அர்ஜுனனும் உறுதி செய்துள்ளான், அது மட்டுமின்றி மாமுனிவர்களான நாரதர், வியாசர் போன்ற பலராலும் அஃது உறுதி செய்யப்பட்டுள்ளது. பகவானுடைய எண்ணிலடங்காத திருநாமங்களில் கிருஷ்ண என்னும் திருநாமமே தலைமையானது என்று பத்ம புராணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஸ்லோகத்திலுள்ள வாஸுதேவர் என்னும் சொல், முழுமுதற் கடவுளின் முக்கியமான விரிவங்கத்தைக் குறிக்கிறது, மேலும் அந்த வாஸுதேவரைப் போன்றே இருக்கும் பகவானின் இதர உருவங்களையும் குறிக்கிறது. குறிப்பாக, வாஸுதேவர் என்னும் நாமம், தேவகி, வஸுதேவரின் தெய்வீகப் புதல்வரைக் குறிக்கின்றது. துறவு வாழ்க்கையில் பக்குவநிலையை அடைந்த பரமஹம்ஸர்களால் ஸ்ரீ கிருஷ்ணர் எப்போதும் தியானம் செய்யப்படுகிறார்.

வாஸுதேவர் அல்லது பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே எல்லா காரணங்களுக்கும் காரணமாவார். இருப்பவை அனைத்தும் பகவானிடமிருந்து தோன்றியவையே. இஃது எப்படி என்பதை இக்காவியத்தின் பிற்பகுதியில் உள்ள அத்தியாயங்கள்

விவரிக்கின்றன. இக்காவியம் புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீக லீலைகளைக் கொண்டுள்ளதால், களங்கமற்ற புராணம் என்று மஹாபிரபு ஸ்ரீ சைதன்யரால் வர்ணிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீமத் பாகவதத்தின் வரலாறும் மிகப் புகழ்பெற்றதாகும். ஸ்ரீ வியாசதேவர் உன்னத ஞானத்தில் பக்குவநிலையை எய்திய பிறகு இதனைத் தொகுத்தார். தனது ஆன்மீக குருவான ஸ்ரீ நாரதரின் உபதேசத்தின் கீழ் இதனை அவர் எழுதினார். நான்கு பிரிவுகளைக் கொண்ட வேதங்கள், வேதாந்த சூத்திரங்கள் (அல்லது பிரம்ம சூத்திரங்கள்), புராணங்கள், மஹாபாரதம் போன்ற வேத இலக்கியங்கள் அனைத்தையும் வியாசதேவர் தொகுத்தார். இருப்பினும் அவருக்கு மன நிறைவு கிட்டவில்லை. அவரது அதிருப்தியைக் கண்ட அவருடைய ஆன்மீக குருவாகிய நாரதர், பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தெய்வீக லீலைகளை வர்ணிக்கும்படி அவருக்கு ஆலோசனை கூறினார். இந்த தெய்வீக லீலைகள் குறிப்பாக இக்காவியத்தின் பத்தாவது காண்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்த கருப்பொருளை ஒருவன் அணுக வேண்டுமெனில், அவன் பலதரப்பட்ட ஞானத்தை விருத்தி செய்து படிப்படியாக முன்னேற வேண்டும்.

தத்துவ நோக்குடைய ஒரு மனம் படைப்பின் மூலத்தைப் பற்றி அறிய விரும்புவது இயற்கையே. இரவில் வானத்திலுள்ள நட்சத்திரங்களைக் கண்டு, இயற்கையாகவே அவற்றில் வசிப்பவர்களைப் பற்றிய கற்பனையில் அவன் மூழ்கிவிடுகின்றான். இத்தகு கேள்விகள் அவனிடம் காணப்படுவது இயற்கைதான், ஏனெனில் மனிதனின் உணர்வு விலங்குகளைக் காட்டிலும் உயர்ந்த நிலையில் உள்ளது. ஸ்ரீமத் பாகவதத்தின் ஆசிரியர், இத்தகு கேள்விகளுக்கு ஏற்ற நேரடியான விடைகளை வழங்குகின்றார். பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே எல்லாப் படைப்பிற்கும் மூலம் என்று அவர் கூறுகிறார், பிரபஞ்சங்களைப் படைப்பவர் மட்டுமல்லாமல், அழிப்பவரும் கிருஷ்ணரே. பிரபஞ்சத் தோற்றம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இறைவனின் ஆணையால் படைக்கப்படுகின்றது. சில காலத்திற்கு அது பாதுகாக்கப்பட்டு, பின்னர் அவரது விருப்பத்தின் பேரில் அஃது அழிக்கப்படுகிறது. எனவே, பரமனின் விருப்பமே எல்லா பிரபஞ்ச இயக்கங்களுக்கும் பின்னணியாக உள்ளது. பலதரப்பட்ட நாத்திகர்கள், சிருஷ்டி கர்த்தாவாக ஒருவர் உள்ளார் என்பதில் நம்பிக்கை கொள்ளாமல் இருப்பது உண்மையே, ஆனால் அதற்கு காரணம் அவர்களது அறிவுப் பற்றாக்குறையே. உதாரணமாக, செயற்கைக் கோள்களை உருவாக்கும் நவீன விஞ்ஞானிகள், ஏதோ சில ஏற்பாடுகளினால் அவற்றை வானவெளிக்குள் செலுத்தி, தொலைவிலிருந்தபடியே அவற்றைக் கட்டுப்படுத்தி, சில காலத்திற்கு பறக்க வைக்கின்றனர். அதைப் போலவே, எண்ணற்ற நட்சத்திரங்களையும் கிரகங்களையும் கொண்ட பிரபஞ்சங்கள் அனைத்தும் முழுமுதற் கடவுளின் அறிவாற்றலால் ஆளப்படுகின்றன.

பூரண உண்மையாகிய முழுமுதற் கடவுளே அனைத்து உயிர்வாழிகளுக்கும் தலைமையானவர் என்று வேத இலக்கியங்கள் கூறுகின்றன. முதன் முதலில் படைக்கப்பட்ட ஜீவனான பிரம்மா முதற்கொண்டு, மிகச்சிறிய எறும்பு வரை உள்ள அனைத்தும் தனித்தன்மை பெற்ற ஜீவன்களே ஆகும். பிரம்மாவிற்கு மேலே தனிப்பட்ட திறன் கொண்ட உயிர்வாழிகளும் பலர் உள்ளனர், முழுமுதற் கடவுளும் அத்தகைய ஓர் உயிர்வாழியே. மற்ற உயிர்வாழிகளைப் போல அவரும் ஒரு தனிப்பட்ட நபர். ஆனால் உன்னத உயிர்வாழியாக அறியப்படும் பரம புருஷர், மிகவுயர்ந்த அறிவாற்றல் உடையவர், கற்பனைக்கெட்டாத பல தரப்பட்ட உன்னத சக்திகளை தன்னகத்தே கொண்டுள்ளவர். மனிதனின் மூளையினால் செயற்கைக் கோளை உண்டாக்க முடியுமெனில், மனிதனை விட சிறந்த மூளையினால் எந்த அளவிற்கு உயர்ந்த அற்புதமான பொருள்களை உண்டாக்க முடியும் என்பதை ஒருவன் மிகச் சுலபமாக கற்பனை செய்து பார்க்க முடியும். இவ்விவாதத்தை நியாயமான மனிதரொருவர் எளிதாக ஏற்றுக்கொள்வார், ஆனால் பிடிவாதமுள்ள நாத்திகர்களோ ஒருபோதும் இதனை ஏற்க மாட்டார்கள். ஸ்ரீல வியாஸதேவரோ அந்த உன்னத அறிவாற்றலை பரமேஷ்வரனாக உடனடியாக ஏற்கின்றார். ஆனால் நாத்திகர்கள் இதை ஏற்கவே மாட்டார்கள். ஆயினும், அந்த உன்னத அறிவாற்றலை பரமேஷ்வரனாக ஸ்ரீல வியாசதேவர் ஏற்கின்றார். பரம்பொருள், பரமேஷ்வரன் அல்லது பரம புருஷ பகவான் என்றழைக்கப்படும் அந்த உன்னத அறிவாற்றலுக்கு தமது மதிப்பிற்குரிய வணக்கங்களை அவர் சமர்ப்பிக்கிறார். அந்த பரமேஷ்வரன் ஸ்ரீ கிருஷ்ணரே ஆவார், ஸ்ரீ வியாசதேவரால் அருளப்பட்ட பகவத் கீதையிலும் பிற சாஸ்திரங்களிலும் குறிப்பாக ஸ்ரீமத் பாகவதத்திலும் அவர் அவ்வாறு ஏற்கப்பட்டுள்ளார். தம்மையன்றி வேறெந்த பர-தத்துவமும் கிடையாது என்று பகவத் கீதையில் பகவான் கூறுகின்றார். எனவே, அந்த பர-தத்துவமாகிய ஸ்ரீ கிருஷ்ணரை, எவரது தெய்வீக லீலைகள் பத்தாம் காண்டத்தில் விவரிக்கப்பட்டுள்ளதோ, அவரை ஸ்ரீ வியாசதேவர் உடனடியாக வழிபடுகிறார்.

மனசாட்சியற்ற நபர்கள் எடுத்தவுடன் பத்தாம் காண்டத்திற்குச் செல்வதோடு, குறிப்பாக பகவானின் ராஸ நடனத்தை வர்ணிக்கும் ஐந்து அத்தியாயங்களுக்குச் சென்று விடுகின்றனர். ஸ்ரீமத் பாகவதத்திலுள்ள இப்பகுதிதான் இந்த மாபெரும் காவியத்தின் மிகவும் இரகசியமான பகுதியாகும். பகவானைப் பற்றிய தெய்வீக அறிவில் ஒருவன் முழுமையாக நிலைபெறாவிடில், ராஸ நடனம் என்றழைக்கப்படும் பகவானின் வழிபடத்தக்க தெய்வீக லீலைகளையும் கோபியர்களுடனான அவரது காதல் விவகாரங்களையும் அவன் தவறாகவே புரிந்துகொள்வான் என்பது நிச்சயம். இத்தகு விஷயங்கள் ஆன்மீகத்தின் மிகவுயர்ந்த நிலைகளாகும், பரமஹம்ஸ நிலையை படிப்படியாக அடைந்த முக்திபெற்ற நபர்கள் மட்டுமே இந்த ராஸ நடனத்தின் தெய்வீக அனுபவத்தைச் சுவைக்க முடியும். ஆகவே, பகவத் லீலைகள் எனும் சாரத்தை உண்மையாக அனுபவிப்பதற்கு முன், படிப்படியாக ஆன்மீகத் தன்னுணர்வை விருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பை ஸ்ரீல வியாசதேவர் பாகவதத்தைப் படிப்பவருக்கு அளிக்கின்றார். (அடுத்த இதழில் தொடரும்)

# கௌடிய வைஷ்ணவ நாள்காட்டி

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

### ஆகஸ்ட்



14—ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அவதார தினம் (நள்ளிரவு வரை விரதம்)

15—நந்த உத்ஸவம், ஸ்ரீல பிரபுபாதர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

17—அன்னத ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:05-10:14

24—சீதாதேவி (அத்வைத ஆச்சாரியரின் மனைவி) தோன்றிய நாள்

27—ராதாஷ்டமி, ஸ்ரீமதி ராதாராணி தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

31—பார்ஸ்வ ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:05-10:11

### செப்டம்பர்



1—ஸ்ரீ வாமன துவாதசி, வாமனதேவர் தோன்றிய நாள், (விரதம் முந்தைய நாளில் அனுசரிக்கப்படுகிறது)
ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி தோன்றிய நாள்

2—ஸ்ரீல பக்திவினோத தாகூர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

3—ஸ்ரீல ஹரிதாஸ் தாகூர் மறைவு நாள்
இரண்டாம் சாதுர்மாதத்தின் இறுதி நாள்

4—ஸ்ரீல பிரபுபாதர் சந்நியாசம் ஏற்ற நாள்
சாதுர்மாதத்தின் மூன்றாம் மாத தொடக்கம் (பாலிலிருந்து விரதம்)

11—ஸ்ரீல பிரபுபாதர் அமெரிக்கா சென்றடைந்த நாள்

15—இந்திர ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:04-08:48

28—ஸ்ரீ மத்வாச்சாரியர் தோன்றிய நாள்

30—பஸங்குச ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:04-09:04

### அக்டோபர்

1—ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி, ஸ்ரீல ரகுநாத பட்ட கோஸ்வாமி, ஸ்ரீல கிருஷ்ண தாஸ கவிராஜ் கோஸ்வாமி ஆகியோரின் மறைவு நாள்

3—மூன்றாம் சாதுர்மாதத்தின் இறுதி நாள்

4—ஸ்ரீ முராரி குப்தர் மறைவு நாள்
சாதுர்மாதத்தின் நான்காம் மாத தொடக்கம் (உளுந்தம் பருப்பிலிருந்து விரதம்)

9—ஸ்ரீல நரோத்தம தாஸ தாகூர் மறைவு நாள்

11—பஹுலாஷ்டமி, ராதா குண்டம் தோன்றிய நாள்


14—ராம ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:04-10:02



18—தீபாவளி

19—கோ பூஜை, கோவர்தன பூஜை
ஸ்ரீ ரசிகானந்தர் தோன்றிய நாள்

20—ஸ்ரீ வாசுதேவ கோஷ் மறைவு நாள்



22—ஸ்ரீல பிரபுபாதரின் மறைவு நாள் (மதியம் வரை விரதம்)

26—கோபாஷ்டமி, ஸ்ரீ ஸ்ரீனிவாஸ ஆச்சாரியரின் மறைவு நாள்

29—உத்தன ஏகாதசி விரதம்
ஸ்ரீல கௌர கிஷோர் தாஸ பாபாஜி நினைவு நாள் (மதியம் வரை விரதம், ஏகாதசி விரதத்துடன் இணைந்து அனுசரிக்கப்படுகிறது)
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 07:48-10:01
பீஷ்ம பஞ்சகத்தின் முதல் நாள்

### நவம்பர்

1—பூகர்ப கோஸ்வாமி மறைவு நாள்
நான்காம் சாதுர்மாதத்தின் இறுதி நாள்

2—துளசி-சாலிக்கிராம திருமணம்
ஸ்ரீ நிம்பார்க ஆச்சாரியர் தோன்றிய நாள்
பீஷ்ம பஞ்சகத்தின் இறுதி நாள்

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635019. போன்: (04344) 226222.
இ-மெயில்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612001. போன்: 99949 49108.
இ-மெயில்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஶ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641014. போன்: (0422) 2626508/9.
இ-மெயில்: bhakti.vinoda.swami@pamho.net
www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600041. போன்: (044) 24530920/21/22/23, 24343266, 32911472
இ-மெயில்: info@iskconchennai.com
www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி. நகர், அடையார், சென்னை - 600020. போன்: (044) 24456199. இ-மெயில்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636012. போன்: (0427) 2001686, 2345545, 94421 53427.
இ-மெயில்: iskcon.salem@pamho.net
www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627002. போன்: (0462) 2501640.
இ-மெயில்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629002. போன்: 98946 00108.
இ-மெயில்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625001.
போன்: (0452) 2346472.
இ-மெயில்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632006.
போன்: (0416) 2241654, 94429 53417.
இ-மெயில்: akincan_bvks97@rediffmail.com

**ஶ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஶ்ரீரங்கம், திருச்சி - 620006.
போன்: (0431) 2433945.
இ-மெயில்: ratishadas@yahoo.co.in

---

**பாண்டிச்சேரி**—57, MG ரோடு, வரதராஜ பெருமாள் கோவில் எதிரில், பாண்டிச்சேரி - 605001.
போன்: (0413) 2221402, 94434 68923, 99408 64086.
இ-மெயில்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை. போன்: 93623 10556.
இ-மெயில்: adgd.jps@gmail.com

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஶ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637001.
போன்: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர்**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600012. போன்: 98400 87067.
இ-மெயில்: jai.gopinath.jps@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607803. போன்: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி.
போன்: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களை தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



## உங்கள் வாழ்வில்

# ஆன்மீக ஞானம் பிரகாசிக்க,

## படியுங்கள் ஸ்ரீல பிரபுபாதர் அருளிய புத்தகங்களை!




### நான் யார்? கடவுள் யார்? கடவுளுக்கும் எனக்கும் என்ன தொடர்பு?

கடவுள் இருக்கும் பட்சத்தில் நான் ஏன் துன்பப்படுகிறேன்? கடவுள் எங்கு இருக்கிறார், எப்படி இருப்பார்? மரணத்திற்குப் பின் நடக்கப்போவது என்ன? போன்ற அடிப்படையான கேள்விகளுக்கான பதில்கள் மட்டுமின்றி, மனதைக் கட்டுப்படுத்தி அமைதியாக வாழ்வதற்கான சிறந்த வழிமுறை, சமுதாயப் பிரச்சனைகள் அனைத்திற்கும் நிரந்தரத் தீர்வு, ஹரி நாம சங்கீர்த்தனத்தின் மகிமை, கிருஷ்ணரின் மீதான தெய்வீக அன்பினை வளர்த்துக் கொள்ளுதல் போன்றவற்றையும், ஆச்சாரிய பரம்பரையினால் அளிக்கப்பட்ட விஞ்ஞானப்பூர்வமான அறிவைக் கொண்டு தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் தனது புத்தகங்களில் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறார். உலகெங்கிலும் 80 மொழிகளுக்கு மேல் மொழிபெயர்க்கப்பட்டுள்ள இவரது புத்தகங்கள் மனித சமுதாயத்தின் மாபெரும் பொக்கிஷம் என்றால் அது மிகையாகாது.